EMS வைத்தியசாலை மட்டக்களப்பு
நவீன வசதிகளுடன் கூடிய தனியார் மருத்துவமனை
விசேட வைத்திய நிபுணர் ஆலோசனைகள்
நவீன ஸ்கானிங் வசதிகள் (CT ஸ்கான், X-RAY, அல்டராசவுண்ட் ஸ்கான்)
தனிப்பட்ட நோயாளர் தங்கும் அறைகள் (STANDARD,LUXARY, SURGERY CARE)
தீவிர சிகிச்சை பிரிவு மற்றும் குருதி சுத்திகரிப்பு பிரிவு
EMS HOSPITAL
Healing Hands.... Caring Hearts...
n010, d ltm nc, c, n
5 111 77 6 556 6008

Follow us:

# தமிழன்
THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 216 சோபகிருது வருடம், சித்திரை மாதம் 08ஆம் திகதி வெள்ளிக்கிழமை (21.04.2023) ஹிஜ்ரி 1444, ரமழான் - 29, 0115 886187 - பக்கங்கள் 12 விலை ரூ.50

EMS வைத்தியசாலை மட்டக்களப்பு
நவீன வசதிகளுடன் கூடிய தனியார் மருத்துவமனை

சர்வதேச தரநிலை ஆபரேஷன் தியேட்டர்
உயர்தர ஆய்வக சேவைகள் (Laboratory)
அவசர சிகிச்சை பிரிவு (ETU)
24 மணி நேர மருந்தகம் (Pharmacy)
அம்புலன்ஸ் சேவை
24 மணி நேர வெளி நோயாளர் பிரிவு (OPD)
n010, d ltm nc, c, n
5 111 77 6 556 6008



## ஈஸ்ரர் தாக்குதலுக்கு 04 ஆண்டுகள் பூர்த்தி

- கொச்சிக்கடையில் விசேட வழிபாடு
- நீதிகோரி கட்டுவாப்பிட்டிய வரை மனிதச் சங்கிலி

•நா.தினுஷா

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்று இன்றுடன் நான்கு வருடங்கள் பூர்த்தியாகின்றன. நான்காண்டு நிறைவை முன்னிட்டு இன்று (21) கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் விசேட நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக தேசிய கத்தோலிக்க மக்கள் தொடர்பாடல் பணிப்பாளர் அருட்தந்தை ஜூட் கிறிஷாந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

### பாணந்துறையிலும் தாக்குதல் அச்சம்;

## பள்ளிவாசல்களுக்கு விசேட பாதுகாப்பு



•கே. சுபானி

பாணந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மூன்று பொலிஸ் பிரிவுகளிலுள்ள 23 பள்ளிவாசல்கள் மற்றும் பொது இடங்களுக்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக பாணந்துறை சிரேஷ்ட பதில் பொலிஸ் அத்தியட்சகர் நிசாந்த சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

## பேராயரின் போராட்டத்துக்கு முழுமையான ஆதரவு

### மௌலவி சஜீர் அறிவிப்பு



நா. தினுஷா

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவங்களின் பின்னர், இடம்பெறவிருந்த பாரிய குழப்பநிலையிலிருந்து நாட்டை பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையே காப்பாற்றினார். இந்தச் சம்பவத்தினால் கத்தோலிக்க மக்களே அதிகம் பாதிக்கப்பட்டார்கள் என்பதை ஒருபோதும் மறுக்க முடியாது. ஆனால், ஒருசில சூத்திரதாரிகளின் இந்தச் செயற்பாட்டினால் அதற்கான நட்டஈட்டை நாட்டிலுள்ள 20 இலட்சம் முஸ்லிம் மக்களே செலுத்தினார்கள்.

02 பக்கம்

### பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிராக

# வடக்கு, கிழக்கில் ஆர்ப்பாட்டங்கள்

•சிவகுமார் திவியா, அப்துல்சலாம் யாசிம், பாருக் ஷிஹான், யாழ்ப்பாணம், பாண்டிருப்பு, வெல்லாவெளி செய்தியாளர்கள்



அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை எதிர்த்து வடக்கு, கிழக்கில் பெண்களால் பாரிய கவனயீர்ப்புப் போராட்டங்கள் நேற்று (20) முன்னெடுக்கப்பட்டன.

மக்களை அச்சுறுத்தும் சட்டங்களை உருவாக்கி சமூக செயற்பாட்டாளர்களை முடக்க வேண்டாமென கோரிக்கை விடுத்த அவர்கள், சுதந்திரமாக வாழ்வதற்கான அடிப்படை உரிமையை அரசாங்கம் உறுதிசெய்ய வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டனர்.

வடக்கில் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலும் கிழக்கில் திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போராட்டத்தில் பெரும் எண்ணிக்கையிலான பெண்கள் கலந்துகொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்துக்கு முன்பாக பெண்களால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியாவில் பத்தினியார் மகிழங்குளம் முனியப்பர் ஆலயத்துக்கு முன்பாக போராட்டம் இடம்பெற்றது.

02 பக்கம்

## 1,320 வைத்தியர்கள் புதிதாக நியமனம்



•க.கிருபாகரன்

நாடளாவிய ரீதியிலுள்ள அரச வைத்தியசாலைகளுக்கு எதிர்வரும் 25ஆம் திகதிமுதல் ஆயிரத்து 320 புதிய வைத்தியர்கள் நியமிக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

02 பக்கம்

## 26 முதல் 28 வரை ஐ.எம்.எவ். விவாதம்



இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதியின் கீழான ஏற்பாட்டை அமுல்படுத்துவதற்கான தீர்மானத்தை எதிர்வரும் 26, 27 மற்றும் 28ஆம் திகதிகளில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள நேற்று (20) இடம்பெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற பதில் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

02 பக்கம்

## முட்டைக்கு நிர்ணய விலை

•நா.தினுஷா

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால், நேற்று (20) முதல் அமுலுக்கு வரும்வகையில் முட்டைக்கான புதிய விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்தத் திருத்தத்துக்கான வர்த்தமானி அறிக்கை நேற்றுமுன்தினம் (19) வெளியிடப்பட்டுள்ளது.



02 பக்கம்

## உயிரிழந்த சிறுத்தைகளின் மரண அறிக்கைகள் எங்கே?

### ஜூன் 15க்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு உத்தரவு

ශ්‍රී ලංකා තොරතුරු දැන ගැනීමේ අයිතිවාසිකම පිළිබඳ කොමිෂන් සභාව
இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு
Right to Information Commission of Sri Lanka

பா.நிரோஸ்

மலையகம் மற்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடந்த 10 வருடங்களுக்குள் உயிரிழந்த சிறுத்தைகளின் மரணப் பரிசோதனை அறிக்கைகளை ஜூன் 15ஆம் திகதிக்கு முன்னர் வழங்க வேண்டும் என தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு, வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்துக்கு உத்தரவிட்டது.

02 பக்கம்

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை தோற்கடிப்போம்

### சர்வாதிகார ஆட்சிக்கு வழிவகுப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு



அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை தோற்கடிக்கத் தயாரெனவும் அவ்வாறான சட்டம் சர்வாதிகார ஆட்சிக்கு வழிவகுப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

02 பக்கம்

## கண் வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை நிறுத்தம்



கொழும்பு தேசிய கண் வைத்தியசாலையின் சகல சத்திரசிகிச்சைகளும் காலவரையறையின்றி இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அதன் பணிப்பாளர் டொக்டர் ஏ.ஆர்.எம். தௌபிக் தெரிவித்துள்ளார்.

சத்திரசிகிச்சை அறையில் கிருமிகள் பரவுவதை துரிதமாக அகற்றி வழமை நிலைக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கான குறிப்பிட்ட திகதியை அறிவிக்க முடியாது எனவும் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...

இனி முட்டைகளை நிறுத்து அளவிட்டு வாங்கலாமாம்... நிலைமை இப்படியே போய் ஒரு காலத்தில முட்டையை உடைச்சு வித்தாலும் விப்பாங்கள்..!



## நெருக்கடியில் சுகாதாரத்துறை



### மருந்துகளின் தரம் குறித்து வைத்தியர்கள் சந்தேகம்

•கே. சுபானி

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட சுமார் 40 பில்லியன் ரூபா பெறுமதியான மருந்துப் பொருட்களுக்கான நிலுவைத்தொகை செலுத்தப்படாதுள்ள நிலையில், நாட்டுக்கு கொண்டுவரப்படும் மருந்துப் பொருட்களின் தரம் குறித்து பிரச்சினைகள் எழுந்துள்ளன. இதனால் சுகாதாரத்துறை பாரிய நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாக சிவில் உரிமைகளுக்கான வைத்தியர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பின் தலைவர் டொக்டர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

## 12 தேயிலை தொழிற்சாலைகள் மாத்தளை மாவட்டத்தில் மூடல்



•எம்.எஸ்.எம்.மஸாஹிம்

மாத்தளை மாவட்டத்தில் 10 ஆயிரம் ஹெக்ரேயர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட தேயிலை உற்பத்தி முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ள நிலையில், சுமார் 12 தேயிலை தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. இதன் காரணமாக ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் தொழிலை இழந்துள்ளதாக ஸ்ரீகெபெக் என்ற சூழல் பாதுகாப்பு அமைப்பின் தலைவர் காமினி ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

### உஷ்



பெசில் ராஜபக்ஷவை பிரதமராக்க ஒருதரப்பு ஆலோசனை தெரிவித்துள்ளதாம்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் எதிர்கால நலனை கருத்திற்கொண்டு இந்த நியமனம் வழங்கப்பட வேண்டுமென அந்தத் தரப்பு ஜனாதிபதி ரணிலுக்கும் தகவல் அனுப்பியுள்ளதாம்.

ஆனால், இந்த ஆலோசனையை ரணில் சீரியஸாக எடுக்கவில்லையெனக் கேள்வி.

# இந்தியத் தூதுவர் பாக்லே மஹிந்தவுடன் சந்திப்பு



இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவுக்கும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பில் நேற்று (20) இடம்பெற்றது. இலங்கையின் கடன் மறுசீரமைப்பு விடயத்தில் இந்தியாவின் ஆதரவு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதற்கு இந்தியாவின் ஒத்துழைப்பு குறித்து இந்தியத் தூதுவர் இதன்போது விளக்கமளித்துள்ளார்.

மேலும் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் இந்திய நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட முதலீடுகளின் நிலைவரம் தொடர்பிலும் பேசப்பட்டது.

## கண் வைத்தியசாலையில்...

எவ்வாறாயினும், இது தொடர்பில், சத்திரசிகிச்சை அறைக்குள் கிருமி எவ்வாறு பரவியது என்பது தொடர்பில் சுகாதார அமைச்சினால் முறையான விசாரணை நடத்தப்பட வேண்டுமென சுகாதார நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

## பயங்கரவாத எதிர்ப்புச்...

மன்னார் நகர சுற்றுவட்டப் பகுதியிலும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிராக பெண்கள் திரண்டு போராட்டம் மேற்கொண்டனர்.

திருகோணமலை நகரசபைக்கு முன்பாகவும் அம்பாறையில் நாவிதன்வெளியிலும் மட்டக்களப்பில் மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்துக்கு முன்பாகவும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

(மேலதிக செய்திகள் 07, 11 ஆகிய பக்கங்களில்)

## 12 தேயிலை தொழிற்சாலைகள்...

மாத்தளை மேலதிக அரச அதிபர் ஏ.எம்.கே. டி.கே அதபத்து தலைமையில் மாவட்ட செயலக வீர கெப்பிட்டிபொல பிரதான மண்டபத்தில் இடம்பெற்ற சூழல் பாதுகாப்பு சம்பந்தமான விசேட கூட்டத்தில் கருத்து தெரிவிக்கும்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

தேயிலை தொழிற்சாலைகள் மூடப்பட்டதால் இங்கு பணிபுரிந்த பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் தங்களது வேலைவாய்ப்புகளை இழந்து தங்களது அன்றாட வாழ்வாதாரத்தை கொண்டு செல்ல முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அவர்கள் கிராம பகுதிகளுக்குச் சென்று கூலி வேலைகளை செய்ய முற்பட்டபோதும் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சி காரணமாக அந்தத் தொழிலையும் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. தோட்டங்கள் காடாகியுள்ள நிலையில் மரங்கள் வெட்டப்படாமலும் முறையான கண்காணிப்பு இல்லாமலும் காலத்துக்கு காலம் தேவையான பசளைகள் மற்றும் கிருமி நாசினிகள் இடப்படாததன் காரணமாக இந்நிலைமை ஏற்பட்டுள்ளது.

மாத்தளை மாவட்டத்தில் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் கூட தங்களது தொழிலுக்கேற்ற அரச உதவிகள் இல்லாமை காரணமாக அவர்களும் இத்தொழிலை கைவிட்டுள்ளனர் என்றார்.

## முட்டைக்கு நிர்ணய விலை...

அதற்கமைய, வெள்ளை முட்டை ஒன்றின் விலை 44 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன், ஒரு கிலோ கிராம் வெள்ளை முட்டை 880 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, பழுப்பு நிற முட்டை ஒன்றின் விலை 46 ரூபா என்பதுடன் ஒரு கிலோ கிராமின் விலை 920 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வர்த்தமானி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், மேற்குறிப்பிடப்பட்டுள்ள சில்லறை விலைக்கும் அதிக விலையில் உற்பத்தியாளர், தயாரிப்பாளர், வழங்குனர், விநியோகஸ்தர் அல்லது வியாபாரி என்போர் விற்பனை செய்யவோ, விற்பனைக்கு வழங்கவோ, விற்பனைக்கு வெளிப்படுத்தவோ, விற்பனைக்காக காட்சிப்படுத்தவோ முடியாது.

இதேவேளை, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினால் கடந்த ஜனவரி மாதம் 20ஆம் திகதி வெளியிடப்பட்ட, 2315/57ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 85ஆம் இலக்க கட்டளையை இரத்துச் செய்வதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## பாணந்துறையிலும்...

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அக்குறணை பிரதேச முஸ்லிம் பள்ளிவாசல் மற்றும் பொது இடங்களை இலக்கு வைத்து குண்டுத் தாக்குதல் நடத்தப்படும் என தெரிவித்து பொலிஸாருக்கு நேற்றுமுன்தினம் (19) கிடைக்கப்பெற்ற அநாமதேய இரகசியத் தகவலையடுத்து அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், பாணந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள 14 பள்ளிவாசல்களுக்கும், பாணந்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள 3 பள்ளிவாசல்கள் மற்றும் பாணந்துறை வடக்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள 6 பள்ளிவாசல்களுக்கும் பொலிஸ் நடமாடும் சேவை வாகனங்கள் மூலம் விசேட பாதுகாப்பு வழகங்கப்பட்டுள்ளது.

மேலும், குறித்த பிரதேசத்தில் சந்தேகத்துக்கிடமான வகையில் நடமாடும் நபர்கள் தொடர்பில் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## 1,320 வைத்தியர்கள்...

குறிப்பாக பெருமளவான நியமனங்கள் பின்தங்கிய பிரதேசங்களில் அமைந்துள்ள வைத்தியசாலைகளுக்கு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தற்போது நாட்டில் சுமார் 19ஆயிரம் வைத்தியர்கள் காணப்படுகின்றனர். புதிய நியமனங்களுடன் இந்த எண்ணிக்கை 20ஆயிரத்தைத் தாண்டும்.

கடந்த காலங்களில் நாட்டில் பொருளாதார பிரச்சினைகள் இருந்தபோதிலும், ஒரே நேரத்தில் அதிகளவான வைத்தியர்களை நியமிக்க முடியும் என்பது இலவச சுகாதார சேவையில் பாரிய சாதனை என சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், ஆண்டுதோறும் மருத்துவக் கல்விக்காக இணைத்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 500 முதல் ஆயிரத்து 800 வரை காணப்படுகிறது.

இதனை ஐயாயிரம் வரை அதிகரிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார். இதன்மூலம் இனிவரும் காலங்களில் சுகாதாரத்துறையில் பாரிய வளர்ச்சி எதிர்பார்க்கப்படுவதாகவும் அமைச்சர் கெஹேலிய தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 25ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்றும் வைத்தியர்கள் நாட்டின் சுகாதாரத்துறையில் முதுநிலைப் பட்டதாரிகளாக இணைந்து கொள்ளவுள்ளனர்.




## ஈஸ்ரர் தாக்குதலுக்கு...

அதற்கமைய, காலை 8.30 மணிக்கு வரவேற்பு நிகழ்ச்சியும், 8.45 மணிக்கு இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன் 8.50 மணிக்கு தேவாலயத்துக்கு முன்பாக மெழுகுவர்த்தி ஏற்றவும், 9.00 மணிக்கு சர்வமதத் தலைவர்களின் பிரார்த்தனைகளுடன் பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் பேச்சும் இடம்பெறவுள்ளது. மேலும், அபெக்ஷா வைத்தியசாலைக்கு வைத்திய உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளதுடன் நன்றியுரையும் இடம்பெறவுள்ளது.

மேலும், 10.00 மணிக்கு பேராயரின் தலைமையில் திருப்பலியும் நடைபெறவுள்ளது.

இதனுடன் தொடர்புடைய "மக்கள் கூட்டத்தை ஒன்றிணைக்கும் வேலைத்திட்டம்" காலை 8.15 மணிமுதல் 9.00 மணிவரை கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்திலிருந்து கட்டுவாப்பிட்டிய புனித செபஸ்டியன் தேவாலயம் வரையில் கொழும்பு – நீர்கொழும்பு பிரதான வீதியின் இரு மருங்கிலும் முன்னெடுக்கப்படும் என்பதுடன் மக்கள் கைகளைக் கோர்த்து நீதிக்கான தமது ஆதரவை வெளிப்படுத்துவார்கள்.

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை...

மகாசங்கத்தினர், சர்வமதத் தலைவர்கள், பல் இன அமைப்புகள் மற்றும் சிவில் சமூகம் உட்பட பெரும்பான்மையான மக்கள் அரசாங்கத்தால் முன்வைக்கப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்துக்கு எதிராகவுள்ளதாகவும் மல்வத்து தேரர் கூட இச்சட்டம் மிகவும் பயங்கரமானது என குறிப்பிட்டுள்ளார் எனவும் அந்த அறிக்கையை தானும் ஏற்றுக் கொள்வதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் ஊடாக கொண்டுவரும் அரச மிருகத்தனம் மற்றும் பயங்கரவாதத்தின் மூலம் இந்நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைகளை அழிப்பதே இந்த அரசாங்கத்தின் ஒரே நோக்கமாக அமைந்துள்ளதாகவும், இந்நோக்கத்தை முறியடிக்க அனைத்து முற்போக்கு சக்திகளையும் திரட்டி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், பாராளுமன்றத்தில் ஜனநாயகத்தை போற்றும் அனைவரும் இணைந்து இதனை முறியடித்து பொதுமக்கள் மற்றும் சிவில் அமைப்புகளுடன் இணைந்து அரசாங்கம் அமுல்படுத்தவுள்ள இந்த சர்வாதிகார எதோச்சதிகார சட்டத்தை முற்றாக தோற்கடிக்கத் தயார் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று விசேட அறிவிப்பொன்றை விடுத்தே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## நெருக்கடியில் சுகாதாரத்துறை...

இதுகுறித்து நேற்று (20) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

டொலர் இன்மையால் மருந்து பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு ஆரம்பத்தில் தெரிவித்திருந்த நிலையில், சுமார் 40 பில்லியன் ரூபா நிலுவை தொகையை செலுத்த பணமின்றி, மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்ய முடியாத இக்கட்டான சூழல் உருவாகியுள்ளது.

இவ்வாறான பாரிய நிலுவைத் தொகை உருவாகும்வரை எந்தவொரு நிதி நிர்வாகம் செய்யப்படாதிருப்பது சந்தேகத்துக்குரியதுடன் இதற்கு பொறுப்புக்கூறவேண்டிய அரசியல் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் மீது எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாதிருப்பது இந்நாட்டின் வரிசெலுத்தும் மக்களுக்கு இழைக்கப்பட்டுள்ள பாரிய அநீதியாகும்.

பொருளாதார நெருக்கடியின் காரணமாக மருந்து பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்திருந்தபோதிலும், இந்திய அரசின் கடன் பொறிமுறையின் அதிகாரிகள் காட்டிய தாமதம் மற்றும் சுகாதார அமைச்சு மற்றும் திறைசேரிக்கு இடையிலான பிரச்சினைகளே இதற்கு காரணம்.

இலங்கைக்கு கடந்த காலங்களில் இறக்குமதி செய்யப்பட்ட தரமற்ற மற்றும் காலாவதியான 5 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான மருந்துப் பொருட்கள் அழிக்கப்பட்டுள்ளதாக கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அப்பாவி மக்கள் மீது பாரிய வரியை திணித்து இதன் மூலம் நாட்டுக்கு கொண்டுவரப்படும் மருந்துப் பொருட்களை அழிப்பதற்கு அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருப்பது ஜனாதிபதிக்கு அகௌரவத்தை ஏற்படுத்துவதாகவுள்ளது.

சுகாதார அமைச்சின் பொது நிர்வாக பொறிமுறை மற்றும் அரசியல் பொறிமுறையை உடனடியாக மாற்றாவிடின் மக்கள் தனது உயிரை விலையாகக் கொடுக்க நேரிடும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## உயிரிழந்த சிறுத்தைகளின்...

வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் கடந்த 10 வருடங்களுக்குள் உயிரிழந்த நிலையில் மற்றும் உயிருடன் பிடிக்கப்பட்ட சிறுத்தைகளின் பல்வேறு விபரங்களைக்கோரி 28.09.2022அன்று வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்துக்கு தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த விண்ணப்பத்துக்கு பதில் வழங்கப்படாத நிலையில் தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த RTIC/Appeal/1441/2022 என்கிற இலக்கத்தைக் கொண்ட மேன்முறையீடு நேற்று (20) ஆணைக்குழுவின் தலைவர் உபாலி அபேவர்தன தலைமையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது மேன்முறையீட்டாளரான ஊடகவியலாளர் பா.நிரோஸ்குமார் சூம் ஊடாகவும் மேன்முறையீட்டாளருக்கு ஆதரவாக ஊடகவியலாளர் தரிந்து ஜயவர்தனவும், வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

ஆணைக்குழு முன்பாக மேன்முறையீடு விசாரணைக்கு நேற்று எடுத்துகொள்ளப்பட்ட நிலையில், நேற்றுக் காலை வனஜீவராசிகள் திணைக்களத்திடமிருந்து சிங்கள மொழியில் பதில் கிடைத்திருந்ததையும் ஊடகவியலாளர் தரிந்து ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டுவந்ததோடு, தமிழ் மொழியில் பதில் வழங்கப்பட்டிருக்க வேண்டுமெனவும் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும் RTIC விண்ணப்பத்தில் கேட்கப்பட்டிருந்த பல கேள்விகளுக்கு பதில் கிடைத்திருக்கின்றன எனவும் உயிரிழந்த சிறுத்தைகளின் மரணப் பரிசோதனை அறிக்கை மாத்திரம் வழங்கப்படவில்லை எனவும் தரிந்து சுட்டிக்காட்டினார்.

இதனை அவதானித்த ஆணைக்குழு உயிரிழந்த சிறுத்தைகளின் மரணப் பரிசோதனை அறிக்கைகளை ஏன் வழங்க முடியாதென வினவியதோடு, இதனை மறைப்பதற்கு இதுவொன்றும் இரகசியம் இல்லை. அதனை வழங்க வேண்டும் எனவும் உத்தரவிட்டது.

மேலும், வனஜீவராசிகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் அத்திணைக்களத்தின் தகவல் அதிகாரி, குறித்தளிக்கப்பட்ட அதிகாரிகளை தொடர்புகொள்வதற்கான விவரங்கள் எதுவும் இல்லை. எனவே, வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு இது தொடர்பில் அறியப்படுத்தி தகவல் அதிகாரி, குறித்தளிக்கப்பட்ட அதிகாரி ஆகியோரின் தகவல்களை உடனடியாக இணையத்தளத்தில் பதிவேற்ற வேண்டும் எனவும் ஆணைக்குழு அறிவுறுத்தியதோடு, தகவலறியும் உரிமைச்சட்டத்தை வேடிக்கையாக எடுத்துக் கொள்ள வேண்டாம் என கடுந்தொனியில் எச்சரிக்கப்பட்டது.

உயிரிழந்த சிறுத்தைகளின் மரணப் பரிசோதனை அறிக்கைகளை ஜூன் 15ஆம் திகதிக்கு முன்னர் வழங்க வேண்டும் எனவும் தகவலறியும் ஆணைக்குழு வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்துக்கு உத்தரவிட்டது.

## பேராயரின் போராட்டத்துக்கு...

ஆகவே, நீதிக்காக பேராயரால் முன்னெடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கைக்கும் நாங்கள் ஆதரவளிப்போம் என்று வீ.ஆர்.வன் அமைப்பின் சமய செயற்பாடுகள் தொடர்பான செயலாளர் மௌலவி சஜீர் தெரிவித்தார்.

நீதிக்காக மட்டும் அமைப்பினால் நேற்று கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாரையும் குற்றஞ்சாட்டுவதோ, விமர்சிப்பதோ எங்களின் நோக்கமில்லை. நீதிக்காக குரல் எழுப்புவதே எங்களின் நோக்கமாகும். உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்று நான்கு வருடங்கள் நிறைவடைகின்றன. இருந்தபோதும், இந்தச் சம்பவம் தொடர்பில் எந்தவொரு நீதியும் நிலைநாட்டப்படவில்லை. கத்தோலிக்க மக்களுடன் தொடர்ச்சியாக கைகோர்த்துக்கொண்டிருக்கிறோம்.

இந்தத் தாக்குதல் சம்பவங்களினால் கத்தோலிக்க மக்களே பாதிக்கப்பட்டார்கள் என்பது தெளிவான உண்மையாகும். இந்த தாக்குதல் சம்பவத்தின் பின்னர் நாட்டில் பாரிய பிரச்சினைகள் உருவாக இருந்தன. குறிப்பாக கத்தோலிக்க மற்றும் முஸ்லிம் மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்தி குழப்பநிலையை ஏற்படுத்த வேண்டும் என்ற குறுகிய எண்ணம் சிலரின் மத்தியில் இருக்கலாம்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது முதல் பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை பல்வேறு கடமைகளை செய்துவருகிறார். முஸ்லிம் மக்களுக்கும் இந்தச் சம்பவத்துக்கும் எவ்வித தொடர்புமில்லை என்று அவர் அப்போதே அறிவித்திருந்தார். இதன் பின்னணியில் அரசியல் சூழ்ச்சி இருப்பதாக அவர் அறிவித்தமையின் காரணமாகவே, நாட்டில் இடம்பெறவிருந்த மிகப்பெரிய குழப்பநிலை நிறுத்தப்பட்டது. அதனால், எப்போதும் அவருக்கு கிடைக்கவேண்டிய கௌரவமும் மரியாதையும் கிடைக்கவேண்டும்.

இந்த தாக்குதல் சம்பவங்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று, எங்களுடன் இடம்பெற்ற ஒவ்வொரு சந்திப்புகளிலும் ரஞ்சித் ஆண்டகை எங்களுக்கு நேரடியாக அறிவித்திருக்கிறார். ஆனால், ஒருசில முஸ்லிம்களை இணைத்துக்கொண்டு முன்னெடுக்கப்பட்ட சூழ்ச்சியே இதுவாகும்.

மௌலவிகள் என்ற அடிப்படையில் கத்தோலிக்க மக்களுடனும், பேராயருடனும், நீதிக்காக அவரால் எடுக்கப்படும் எந்தவொரு வேலைத்திட்டத்துக்கும் ஆதரவை வழங்கி கைகோர்த்துக்கொள்வோம். கத்தோலிக்க மக்கள் பாதிக்கப்பட்டார்கள் என்பதை மறுக்க முடியாது. இந்த சம்பவத்துக்கான நட்டஈட்டை, இந்த நாட்டில் வாழும் 20 இலட்சம் முஸ்லிம் மக்களும் செலுத்தவேண்டி நேர்ந்தது. அதுவே பாரிய பிரச்சினையாகும். இந்த செயற்பாட்டினால் சகல முஸ்லிம் மக்களுக்கும் தலைகுனிவை ஏற்படுத்தியது.

எங்கும் கலாசார ஆடைகளை அணிந்து வெளியில் நடமாட முடியாத நிலை ஏற்பட்டது. பொது போக்குவரத்துகளிலும் அரச அலுவலகங்களிலும் எங்களின் கலாசார ஆடைக்கு தடைவிதிக்கும் வகையில், முஸ்லிம் பெண்கள் அணிவது போன்று புர்க்கா ஆடையை அடையாளப்படுத்தும் ஸ்டிக்கர்களை ஒட்டினார்கள். இதுவரையிலும் அவை அகற்றப்படவில்லை. முஸ்லிம் மக்கள் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டது மாத்திரமல்லாமல் பள்ளிவாசல்கள் ஒவ்வொன்றும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. பள்ளிகளுக்கு வழங்க வேண்டிய மரியாதைகூட பின்பற்றப்படவில்லை.

சஹ்ரானுக்கும் எங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை. இந்தச் சம்பவத்தின் பின்னர் மூவாயிரம் வரையிலான முஸ்லிம்கள் கைதுசெய்யப்பட்டார்கள். கைதுசெய்யவேண்டாம் என்று கூறிவில்லை. ஆனால், சாதாரண காரணங்களை வைத்து இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டார்கள். அவர்களில் 200 வரையிலானவர்கள் இன்றும் சிறைச்சாலைகளில் இருக்கிறார்கள். அவர்களின் எதிர்காலத்தை வீணாக்காமல் விசாரணைகளை முன்னெடுத்து குற்றம் செய்திருந்தால் தண்டனை வழங்கவும், அவ்வாறு தவறு செய்யாவிட்டால் உடனடியாக அவர்களை விடுவிக்கவும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நீதியை நிலைநாட்டுவதற்காக மௌலவிகள் கத்தோலிக்க மக்களுடன் கைகோர்த்துக் கொள்ளுவோம். இந்த சம்பவங்களின் உண்மை குற்றவாளிகள் யார் என்பதை தெளிவாக நாட்டுக்கு அறிவிக்க வேண்டும் என்றார்.

## 26 முதல் 28 வரை...

பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் நேற்று(20) முற்பகல் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு கூடியபோது இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இலங்கைப் பொருளாதார மீட்புக்கான விரைவான நிலைமாற்றத்தினை அடைவதற்காகவும் அதனைத் தொடர்ந்து இலங்கை மக்களுக்கும் எதிர்காலச் சந்ததியினர்களுக்கும் நலன் பயக்கும் நிலைபெறுதகு பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கும் சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட சுமார் 3.0 பில்லியன் ஐ.அ. டொலர்கள் பெறுமதியான 48 மாத கால நீடிக்கப்பட்ட நிதி வசதி தொடர்பான ஏற்பாடு 2023 மார்ச் 22ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த ஏற்பாட்டினை அமுல்படுத்துவதற்குத் தேவைப்படுகின்ற சகல அங்கீகாரமும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சுக்கு வழங்கப்பட வேண்டுமென இந்தத் தீர்மானத்தினால் முன்வைக்கப்படுவதுடன், மூன்று நாள் விவாதத்தைத் தொடர்ந்து தேவையேற்படின் வாக்கெடுப்பும் நடத்தப்படவுள்ளது.

பாராளுமன்றம் எதிர்வரும் 25ஆம் திகதி முதல் 28ஆம் திகதிவரை கூடவுள்ளதுடன், இந்த ஒவ்வொரு நாளும் மு.ப. 9.30 முதல் மு.ப. 10.30 வரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஏப்ரல் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 10.30 முதல் பி.ப. 5.00 மணிவரை குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் 2023.01.20ஆம் திகதி 2317/28ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

அதனையடுத்து, பி.ப. 5.00 மணிமுதல் பி.ப. 5.30 மணிவரை ஆளுங்கட்சியினால் கொண்டுவரப்படும் பிரேரணைக்கமைய சபை ஒத்திவைப்பு வேளையின் போதான விவாதம் இடம்பெறவுள்ளது.

ஏப்ரல் 26ஆம் திகதி வாய்மூல விடைக்கான வினாக்களைத் தொடர்ந்து அத்தியாவசிய பொதுச் சேவைச் சட்டத்தின் கீழ் 2023.04.17ஆம் திகதிய 2328/02ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையை விவாதமின்றி அனுமதிக்கவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது. அதனையடுத்து பி.ப. 5.00 மணிவரை இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதியின் கீழான ஏற்பாட்டினை அமுல்படுத்துவதற்கான தீர்மானம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

அதன்பின்னர், அரசாங்கத்தின் பல்வேறு நிறுவனங்களின் ஆண்டறிக்கைகள் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள 13 பிரேரணைகள் அனுமதிக்காக முன்வைக்கப்படவுள்ளன. மேலும் தனியார் உறுப்பினர் சட்டமூலங்களான களனி பௌத்த மகளிர் தருமச் சங்கம் (கூட்டிணைத்தல்) மற்றும் இலங்கை வரிவிதிப்பு நிருவாகம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் என்பவற்றை இரண்டாம் மதிப்பீட்டுக்காக சமர்ப்பிக்கவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

அதனையடுத்து, பி.ப. 5.00 மணிமுதல் 5.30 மணிவரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான வினாக்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 27 மற்றும் 28ஆம் திகதிகளில் மு.ப. 10.30 முதல் பி.ப. 5.00 மணிவரை முறையாக இரண்டாவது மற்றும் மூன்றாவது நாளாக இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதியின் கீழான ஏற்பாட்டினை அமுல்படுத்துவதற்கான தீர்மானம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

ஏப்ரல் 27ஆம் திகதி பி.ப. 5.00 மணி முதல் 5.30 மணிவரை எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் பிரேரணைக்கு அமைய சபை ஒத்திவைப்பு வேளையின் போதான விவாதம் இடம்பெறும்.

ஏப்ரல் 28ஆம் திகதி இடம்பெறும் விவாதத்தை அடுத்து உள்நாட்டு அரசிறை (திருத்தச்) சட்டமூலத்தை விவாதமின்றி நிறைவேற்றுவதற்கு இதன்போது இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து பி.ப. 5.00 மணிமுதல் பி.ப. 5.30 மணிவரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான வினாக்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

# அநுராதபுர கடைத்தொகுதியில் தீப்பரவல்



அநுராதபுரம் சந்தைப் பகுதியில் உள்ள நான்கு மாடிக் கடைத் தொகுதியில் நேற்று (20) தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தீயை கட்டுப்படுத்த அநுராதபுரம் மாநகர சபையின் தீயணைப்பு படையினர் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நாட்களில் நாட்டில் கடும் வெப்பமான காலநிலை நிலவி வருவதால், தீ வேகமாக பரவியதாகவும், ஒரு கடையில் பரவிய தீ அருகில் உள்ள பல கடைகளுக்கும் பரவியதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# உயர்தரப் பரீட்சைத் தாள் மதிப்பீட்டுப் பணிகள் தாமதம்

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

2022ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் பெற்றோர்கள் குழுவொன்று நேற்று (20) காலை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளது.

விடைத்தாள்களை மதிப்பிடுவதில் தாமதம் ஏற்படுவதால், தங்கள் பிள்ளைகளுக்கு அநீதி இழைக்கப் படுவதாக அந்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பில் அமெரிக்கா கரிசனை



உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் இலங்கை அரசாங்கத்திடம் விரிவாக கலந்துரையாடியுள்ள அமெரிக்கா, அது சர்வதேச விதிமுறைகளுக்கமைய உருவாக்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் கரிசனை கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவை நேற்று (20) சந்தித்த இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் அமெரிக்காவின் இந்த கரிசனையை தெரிவித்துள்ளார்.

இந்தச் சட்டமூலம் தொடர்பில் பொது மக்களின் கருத்துகளையும் பாராளுமன்ற கலந்துரையாடல் களையும் ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதாகவும் அமைச்சரிடம் அமெரிக்கத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

# தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் சித்திரை மாதம் 8ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

| | |
|---|---|
| மேஷம் | தேவையற்ற சிந்தனைகளால் மனதைப் போட்டு வீணே குழப்பிக் கொள்வீர்கள். அவசரத் தன்மையால் உடல் உபாதைகள் உண்டு. |
| ரிஷபம் | வீண் பணவிரயத்தை தவிர்க்க முடியாது போகும். உடல் நலம் குறித்து அசட்டையாக இருந்து விடாதீர்கள். |
| மிதுனம் | போட்டிப் பந்தயங்களில் வெற்றி மட்டுமல்லாது புகழின் உச்சத்துக்கு செல்ல முடியும். நண்பர்களின் உதவி உண்டு. |
| கடகம் | மனைவி மக்களால் அதிக சுகத்தினையும் மகிழ்ச்சியினையும் அடைவீர்கள். மற்றவர்கள் உங்கள் கட்டுப்பாட்டுக்குள் இருப்பர். |
| சிம்மம் | சிலரின் கட்டளையின் கீழ் நாளாந்த நடவடிக்கைகளைத் தொடர வேண்டி வரும். உடல் உழைப்பு அவசியம் தேவை. |
| கன்னி | தொழில் வியாபாரத்தில் கவனமாக செயல்படாவிட்டால் நட்டங்களை அடைய நேரிடும். எதற்கும் அவசரம் வேண்டாம். |
| துலாம் | உங்கள் மனைவியின் இன்ப அதிர்ச்சியால் பூரித்துப் போவீர்கள். பிடித்தவர்களை வசியம் செய்யும் சிறப்பான நன்நாள். |
| விருச்சகம் | புதிதாகச் சேரும் நண்பர்களுடன் விருந்துண்டு மகிழ்வீர்கள். பணத் தட்டுப்பாட்டினை எப்படியாவது சமாளித்துவிடுவீர்கள். |
| தனுசு | வீண் மனக்கவலைகளை விட்டுவிட்டு அடுத்து குழந்தைகளுக்கு என்ன செய்யலாம் என்பதை பற்றி முடிவெடுங்கள். |
| மகரம் | வாழ்க்கை முன்னேற்றத்துக்குத் தேவையான திட்டங்களை முறையாக ஆரம்பிப்பீர்கள், தாயார் வழியில் இலாபங்கள் உண்டு. |
| கும்பம் | கணவன் மனைவி உறவில் நிலவிவந்த தொடர் பிரச்சினைகள் விலகி அமைதி ஏற்படும். பல முயற்சிக்குப் பின்னர் வெற்றி. |
| மீனம் | குடும்ப உறுப்பினர் நன்மை கருதி பல செலவுகளை செய்வீர்கள். கொடுத்த வாக்கினை காப்பாற்றி உங்கள் நம்பகத் தன்மையினை நிரூபிப்பீர்கள் |

| | |
|---|---|
| **திதி** | : பிரதமை மு.ப.8.29 வரை பின் துவிதியை |
| **நட்சத்திரம்** | : பரணி பி.ப.10.59 வரை பின் கார்த்தியை |
| **யோகம்** | : சித்த யோகம் |
| **வார சூலை** | : மேற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| **நல்ல நேரம்** | : மு.ப. 5.59 – 6.59 மணிவரை |
| **ராகு காலம்** | : 10.29–11.59 மணிவரை |
| **எமகண்டம்** | : 2.59 - 4.29 மணிவரை |
| **குளிகை** | : 7.29 – 8.59 மணிவரை |
| **சந்திராஷ்டமம்** | : கன்னி ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும் |
| **தன அதிர்ஷ்டம்** | : அசுவினி, மகம், மூலம் (பிறந்தவர்களுக்கு) |
| **விஷேட தினம்** | : சித்திரைப் பரணி -வைரவ விரதம்- சந்திர தரிசனம் |

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
**(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)**
**ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.**
**தொலைபேசி : 077-0525325**
**078-6759739**




தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2023, ஏப்ரல் 21ஆம் திகதி, வெள்ளிக்கிழமை**

# மறக்க முடியாத ஏப்ரல் 21

2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி கொண்டாடப்பட்ட ஈஸ்ரர் தினத்தன்று, மூன்று கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் நட்சத்திர ஹோட்டல்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் 277 பேர் உயிரிழந்திருந்தனர். 400இற்கும் அதிகமானோர் காயமடைந்திருந்தனர்.

அத்துடன், 40 வெளிநாட்டவர்கள் கொல்லப்பட்டதுடன், 45 சிறார்களும் இந்தத் தாக்குதலில் உயிரிழந்திருந்தனர். இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டு நான்கு வருடங்கள் கடக்கவுள்ள நிலையில், இன்று வரை தங்களுக்கு நியாயம் கிடைக்கவில்லையென ஈஸ்ரர் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

அரசாங்கத்திற்கு எதிராக நாடு முழுவதும் நடத்தப்படும் போராட்டங்களிலும், ஈஸ்ரர் தாக்குதல் தொடர்பிலான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஈஸ்ரர் தின தாக்குதலுக்கான நீதியை பெற்றுத் தருவதாக கூறி ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்கள், தமக்கான நீதியை பெற்றுக்கொடுக்கவில்லை என அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இலங்கையில் உள்ள கத்தோலிக்க திருச்சபை உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதலின் 4ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இன்று மனிதச் சங்கிலியை கட்டியெழுப்பவுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களுக்கு எதிரான இந்த மனிதச் சங்கிலி போராட்டத்தில் இணைவதற்கு, தமது பிரதேச தேவாலயங்களில் ஒன்று கூடுமாறு அனைத்து பொதுமக்களையும் கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித் வலியுறுத்தியுள்ளார். இன, மத மற்றும் அரசியல் கட்சி வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல், அனைத்து பொதுமக்களும் இதில் இணைய வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கவும், சுதந்திரத்தின் கரங்களை வலுப்படுத்தவும் இலங்கையின் தலைவர்களை கோரும் வகையில் இந்த மனிதச் சங்கிலிப் போராட்டம் அமையும் என்று கர்தினால் தெரிவித்துள்ளார்.

எனவே, இன்று 21ஆம் திகதி காலை கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் இருந்து நீர்கொழும்பு, கட்டுவாப்பிட்டி புனித செபஸ்தியார் தேவாலயம் வரையில் அமைதிப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக பேராயர் மல்கம் ரஞ்சித் குறிப்பிட்டுள்ளார்.

2019ஆம் ஆண்டு நிகழ்த்தப்பட்ட ஈஸ்ரர் தற்கொலை குண்டுத் தாக்குதல்கள், இலங்கை உட்பட முழு உலகையே அச்சமயம் உலுக்கியிருந்தன. அத்துடன் குறித்த தாக்குதல்கள் கடந்த மைத்ரி - ரணில் நல்லாட்சியை முடிவுக்கு கொண்டு வருவதற்கு பிரதான காரணமாகவும் இருந்தன.

இவ்வாறான சூழ்நிலையிலேயே இந்த தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன மீது கடந்த காலங்களில் கடுமையான பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. அத்துடன், பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித்த ஜெயசுந்தர உட்பட அதி சிரேஷ்ட தரத்தைச் சேர்ந்த உயர் பொலிஸ் அதிகாரிகள் மீதும் ஈஸ்ரர் தாக்குதல் தொடர்பில், இலங்கையின் திருச்சபை உட்பட பல தரப்பினரும் கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர்.

ஈஸ்ரர் தாக்குதல்களில் முதன்மைக் குற்றவாளியாக அனைத்து தரப்பினராலும் தான் குற்றஞ்சாட்டப்படுவதை நன்கு உணர்ந்த மைத்ரிபால சிறிசேன அக்குற்றச்சாட்டில் இருந்து தன்னை தற்காத்துக் கொண்டு தன்னை நிரபராதியாக காட்டிக் கொள்வதற்காக, அன்றைய பொலிஸ் மா அதிபரை ஈஸ்ரர் தாக்குதலில் சிக்கவைப்பதற்கான பகீரதப் பிரயத்தனத்தை மேற்கொண்டதாக செய்திகள் வெளிவந்தன.

ஈஸ்ரர் தாக்குதல் தொடர்பில் முன்பே பல உறுதியான புலனாய்வுத் தகவல்கள் அரச உயர்மட்டத்தினருக்குக் கிடைக்கப்பெற்றும், அதனை தடுப்பதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் அனைத்திலும் கோட்டைவிட்டு, முழு தேசத்தின் பாதுகாப்பையும் கேலிக்கூத்தாகி மக்களின் பெரும் சீற்றத்திற்கு ஆளான அன்றைய ஜனாதிபதி மைத்ரி, எவ்வித குற்ற உணர்வுமின்றி நயவஞ்சகமாக அன்றைய பொலிஸ் மா அதிபரும், அன்றைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமே ஈஸ்ரர் தின தற்கொலைத் தாக்குதல்கள் சம்பவங்களுக்கு பொறுப்புக் கூறவேண்டும் என தெரிவித்திருந்தார். இன்றும்கூட நீதிகோரும் பேராயர் என்ன பிரதம நீதியரசரா என்று திமிராக கேள்வியெழுப்புகிறார் மைத்ரி.

மைத்ரி - ரணில் தலைமையிலான நல்லாட்சி நிலவிய 2019ஆம் ஆண்டின் உயிர்த்த ஞாயிறு தினத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் உரிய புலனாய்வுத் தகவல்கள் கிடைக்கப்பெற்றும் அதனை தடுப்பதற்கான நடவடிக்கைகள் எவையும் அரச உயர் மட்டத்தினராலும், பொலிஸ் உயர் அதிகாரிகளினாலும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் கொழும்பு மறை மாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் கடுமையான குற்றச்சாட்டுகளை தொடர்ச்சியாக முன்வைத்து வருகிறார்.

குறித்த தாக்குதல்கள் தொடர்பில் உண்மைகளை கண்டறியவும், விசாரணைகளை மேற்கொள்ளவும் அன்றைய ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவினால் கடந்த 2019ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது.

அந்த ஆணைக்குழு நீண்ட காலமாக பல விசாரணைகளை நடத்தி, நூற்றுக்கணக்கான சாட்சியங்களைப் பதிவு செய்திருந்தது. அத்துடன் குறித்த தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் தமது இறுதி அறிக்கையையும், ஆணைக்குழு முன்வைத்தது. குறித்த ஜனாதிபதி ஆணைக்குழு, ஈஸ்ரர் தின தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் அளிக்கப்பட்ட பல சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால மீதே பல்வேறு குற்றச்சாட்டுகளைச் சுமத்தியது. அதன் அடிப்படையில் தாக்குதல் காலத்தின்போது ஜனாதிபதியாக பதவி வகித்த மைத்ரிபால சிறிசேன மீது குற்றவியல் வழக்குகளை தாக்கல் செய்யுமாறு ஆணைக்குழு தனது பரிந்துரைகளையும் இலங்கை அரசாங்கத்திற்கு முன்வைத்தது.

ஆனால், அந்தத் தாக்குதல் தொடர்பில் நீதியை நிலைநாட்ட இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இந்தத் தாக்குதல் சம்பவத்தில் கிறிஸ்தவர்களுக்கு எந்தளவு பாதிப்பு ஏற்பட்டதோ, அதேபோல் இஸ்லாமிய சமூகமும் அதன் பின்னர் துயர்களை எதிர்கொண்டது. இஸ்லாமியர்கள் அனைவரும் பயங்கரவாதிகள் என்ற வகையிலான வரைவிலக்கணங்களும் பல்வேறு தரப்புகளால் கொடுக்கப்பட்டன.

நீதியான விசாரணை ஒன்று நடந்திருந்தால் நதிமூலம், ரிஷிமூலம் கண்டறிந்திருக்கலாம்.

இப்போதும் காலம் தாழ்ந்துவிடவில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்தால் பாதிக்கப்பட்ட மக்களின் மனதின் ரணங்களை ஆற்ற இப்போதும் விசேட விசாரணைக்கு உத்தரவிடலாம். ஆனால், அரசியல் கள நிலைமை அதனை செய்ய அவரை விடாது. அரசியல் காரணங்களுக்காகவே உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் நடந்திருக்குமாயின் அதன் மீதான விசாரணைகள் நடக்காமல் இருக்கவும் அரசியல் காரணங்கள் இருக்கக் கூடுமல்லவா?



# அட்சயதிரிதியை அன்று என்னவெல்லாம் செய்யலாம்?

**சி.திவியா**

'அட்சய' என்றால் அழியாது பெருகக் கூடியது எனப் பொருள். ஒவ்வொரு வருடமும் சித்திரை மாதம், அமாவாசையை அடுத்து வரும் வளர்பிறை திரிதியை நாளை, 'அட்சயதிரிதியை' திருநாளாகக் கொண்டாடுகின்றோம். இந்த வருடம் நாளை 22ஆம் திகதி சனிக்கிழமையன்று (சித்திரை-09) அட்சய திரிதியை வருகிறது.

இத்தினத்தில் தங்கம், வெள்ளி போன்ற பொன், பொருள் ஆபரணங்கள் வாங்கினால், செல்வம் பெருகும் என்று மக்கள் கருதுகின்றனர். ஆனால், அது தவறான எண்ணக்கரு. அதனை சிலர் வியாபார உத்தியாக பயன்படுத்த தொடங்கிவிட்டனர். இத்தினத்தில் வாங்கப்படும் எந்தப் பொருள் அடுத்த வருடம் பல்கிப் பெருகியிருக்கிறதோ அதனை நாம் வாங்க வேண்டும். தானியங்கள், உப்பு, மஞ்சள் போன்றவைதான் அவை என சாஸ்திரங்கள் முதன்மைப்படுத்தி கூறுகின்றன. எங்கும் கட்டாயம் தங்கம் வாங்க வேண்டும் என்று கூறப்படவில்லை. அட்சயதிரிதியை அன்று தர்ம சாஸ்திரங்கள் கூறும் வழியைப் பின்பற்றினால் நாம் கனவிலும் நினைத்துப் பார்க்காத பல நல்ல பலன்களை அடையலாம். 'அட்சய திரிதியை' அன்று நாம் என்ன செய்யவேண்டும், எவ்வாறு இறைவனை வழிபட வேண்டும் என்று கூறப்படுகின்றது.

'அட்சயதிரிதியை' அன்று நாம் செய்யும் நன்மைகள் பன்மடங்காகப் பெருகி, அழியாத பலன்களைப் பெற்றுத் தரும். 'அட்சயதிரிதியை' அன்று நாம் செய்ய வேண்டிய மிக முக்கியமான காரியங்கள். கோயிலுக்குச் செல்லுதல், புனித நீராடுதல், பித்ரு காரியம், இறைவனை வழிபடுதல், நாம வழிபாடு மற்றும் எளியவர்களுக்கு இயன்ற அளவுக்கு தானம் செய்தல் என்பனவாகும்.

## அட்சயதிரிதியை சிறப்புகள்

பிரம்மன் தனது சிருஷ்டித் தொழிலைத் தொடங்கியது இந்த நாளில்தான்.

பிரளயம் முடிந்து, வெள்ளத்தில் மிதந்து வந்த கும்பத்தை உடைத்து, சிருஷ்டி மீண்டும் துவங்க சிவபெருமான் அருளிய தினம். திருமகள் திருமாலின் இதயத்தில் குடிகொண்ட தினம். அதனால்தான், இன்றைய தினத்தில் லட்சுமிதேவியை மட்டும் வணங்காமல் பெருமாளையும் சேர்த்து வணங்க வேண்டும் என்பர். வனவாசம் சென்ற பஞ்ச பாண்டவர்கள் தவம் இருந்து சூரிய பகவானிடம் அட்சய பாத்திரம் பெற்ற தினம்.

பெருமாளுக்கே கடன் கொடுத்த குபேரன், லட்சுமி தேவியை வணங்கி, செல்வத்தைப் பெற்ற தினம். இன்றைய தினத்தில் லட்சுமி பூஜை, குபேர பூஜையை செய்ய ஐஸ்வர்யம் பெருகும். இயலாதவர்கள், "ஓம் ஐஸ்வரேஸ்வராய நம" என்று கூறினாலே போதும் என்கிறார் திருமூலர். பாற்கடலைக் கடைந்தபோது ரத்தினங்கள், ஐராவதம், கல்பதரு, காமதேனு, சந்திரன், மகாலட்சுமி ஆகியோர் தோன்றினர். இப்படி அலைமகள் அவதரித்த தினமே அட்சயதிரிதியை. பிட்சாடனரான ஈஸ்வரன், ஸ்ரீ அன்னபூரணியிடம் பிட்சை பெற்றது இந்த நாளில்தான். கௌரவ சபையில் திரௌபதியின் மானம் காக்க ஸ்ரீ கிருஷ்ணர் துகில் தந்து அருளியது போன்ற புராணச் சம்பவங்கள் நிகழ்ந்ததும் இந்தத் தினத்தில்தான்.

பரசுராமர் அவதரித்ததும் அட்சயதிரிதியையில்தான். இந்த நாளில் பரசுராமர் வழிபாடு நன்மை தரும். அட்சயதிரிதியை அன்று நாம் என்ன வாங்கலாம்? அன்றைய தினத்தில் லட்சுமி தேவி வசிக்கும் பொருட்களை வாங்கலாம். அது தங்கம், வெள்ளி போன்ற ஆபரணங்களாக மட்டுமே இருக்க வேண்டும் என்பதல்ல. பச்சரிசி, வெல்லம், உப்பு ஆகியவற்றையும் நாம் வாங்கலாம். ஏனென்றால், இயற்கை தோன்றும்போது, முதலில் வந்தவை இவைதான். என்னென்ன பொருட்களைத் தானம் தரலாம்?

ஒரே இடத்தில் செல்வம் குவிந்திருப்பதை இறைவன் விரும்புவதில்லை. இருக்கப்பட்டவர்கள் இல்லாதவர்களுக்குக் கொடுத்து இல்லாமை நீங்கப் படைக்கப்பட்ட நாள். ஒரு கையளவு நெல் பல மூட்டை அரிசியை உருவாக்க முடியும். அதே போல நாம் கொடுக்கும் சிறு தானமும் பல மடங்காகத் திரும்ப வரும்.

வெப்பத்தைத் தணிக்கும் வகையில் உடுக்க உடை, குடை, பானம், நீர் மோர், விசிறி போன்றவற்றை தானம் தரச் சொல்கிறது பவிஷ்ய புராணம்.

குறிப்பாகத் தண்ணீர் நிறைந்த குடம் கொடுத்தால் அழியாத செல்வம் பெறலாம். நோயால் அவதிப்படுபவர்களுக்கு மருத்துவ உதவியும், கிழிந்த ஆடை அணிந்தவர்களுக்கு நல்ல ஆடையையும் அளிக்கலாம். தயிர்சாதம் தானம் செய்தால், ஆயுள் பெருகும். இனிப்புப் பொருட்கள் தானம் தந்தால், திருமணத் தடை அகலும்.

அரிசி, கோதுமை முதலான உணவு தானியங்களை தானம் செய்தால், விபத்துகள்- அகால மரணம் போன்றவை சம்பவிக்காது. அட்சயதிரிதியை அன்று அன்னதானம் செய்வதால், இறைவனுக்கே அன்னமிட்ட பலன் கிட்டும் குடும்பத்தில் வறுமை நீங்கும்.

கால்நடைகளுக்குத் தீவனம் அளித்தால் வாழ்வு வளம் பெறும்.

## அட்சயதிரிதியையும் பித்ருக்கள் காரியமும்

இந்நாளில் பித்ருக்கள் காரியம் மிகுந்த சிறப்பான ஒன்றாகும். தவிர, அன்று பித்ருக்களுக்கு தர்ப்பணம் செய்த பின், பசுக்களுக்கு வாழைப்பழம் கொடுப்பது சிறப்பு. அட்சயதிரிதியை நாளில் இறைவனுக்குப் படைத்து உண்ணும் பிரசாதம் மிகச் சிறந்ததாகும்.

கிராமத்தில் இருந்த வியாபாரி ஒருவர், அட்சயதிரிதியை அன்று கங்கையில் நீராடி, பித்ருக்களுக்கு தர்ப்பணம் செய்து, ஏழை மக்களுக்குத் தானியங்களை தானம் செய்வதை வழக்கமாக வைத்திருந்தார். இதனால் அடுத்த பிறவியில் ராஜயோகம் பெற்றார். அரசனான பிறகும் அட்சயதிரிதியையில் முற்பிறவியில் செய்த புண்ணிய காரியங்களைச் செய்ததால், வைகுண்டம் அடைந்தார். எனவே, அமாவாசை அன்று திதி கொடுக்காதவர்கள் கூட அன்றைய தினத்தில் தர்ப்பணம் செய்யலாம்.

## அட்சயதிருதியையில் செய்யக்கூடியவை

சீமந்தம், மாங்கல்யம் செய்ய, விவாகம், தொட்டிலில் குழந்தையை விட, கிரகப்பிரவேசம் செய்ய, காது குத்த உகந்த தினம். நிலங்களில் எரு இட, விதை விதைக்க, கதிர் அறுக்க, தானியத்தைக் களஞ்சியத்தில் சேர்க்க, தானியம் உபயோகிக்க, கால்நடைகள் வாங்க போன்ற விவசாயப் பணிகளில் ஈடுபடலாம். வாகனம் வாங்க, புதிய ஆடை அணிய, மருந்து உட்கொள்ள, பயணம் மேற்கொள்ளலாம். இந்தப் புண்ணிய நாளில் அழியாத செல்வமான பல புண்ணியங்களைச் சேகரியுங்கள். அதே நேரத்தில் அறிஞர்களையும் முன்னோர்களையும் மறந்துவிட வேண்டாம்.

ஆக, தான தர்மத்திற்குரிய நாளே தவிர அட்சயதிருதியை தங்க வியாபாரத்திற்குரிய நாளல்ல.

**நக்கல் நமசிவாயம்**

*பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப தேசிய அரசாங்கம் அமைக்கோனுமாம்... நாட்டின்ர பொருளாதாரத்தையா அல்லது அரசியல்வாதிகளின்ர பொருளாதாரத்தையா எண்டு தெரியேல்ல..!*



## இன்றைய நாளில்...

- 1782 – இரத்தினகோசின் நகரம் (இன்றைய பேங்கொக்) முதலாம் இராமா மன்னரால் அமைக்கப்பட்டது.
- 1944 – பிரான்ஸில் பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்தது.
- 1964 – டிரான்சிட் - 5 பி.என். என்ற செயற்கைக்கோள் சுற்றுவட்டத்தில் இணைய முடியாமல் வளி மண்டலத்தினுள் மீளத் திரும்பியது. இதன்போது 0.95கிகி கதிரியக்க புளூட்டோனியம் பரவலாக சிதறியது.
- 1987 – கொழும்பில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 106 பேர் கொல்லப்பட்டனர்.
- 2019 – இலங்கை உயிர்த்த ஞாயிறு தின குண்டுவெடிப்புகள்: கொழும்பு உட்பட பல இடங்களில் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று மூன்று கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் நட்சத்திர ஹோட்டல்களில் இஸ்லாமிய அரசு ஆதரவில் தேசிய தவ்கீத் ஜமாத் தீவிரவாதிகள் நடத்திய தற்கொலை குண்டுத் தாக்குதல்களில் 277 பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர்.

# முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் ஜனநாயகக் கோட்பாடுகள் மீதான கடுமையான தாக்குதல்

## ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான சிவில் சமூக கூட்டமைப்பு தெரிவிப்பு

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இரத்துசெய்ய அல்லது திருத்தம் செய்யவேண்டுமென கணிசமான சர்வதேச அழுத்தம் ஏற்பட்டுள்ள சூழலில், அரசாங்கம் அதன் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை பாராளுமன்றத்தில் முன்வைக்க உத்தேசித்துள்ளது. இச்சட்டம் துஷ்பிரயோகம் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் காரணமாக, பயங்கரவாதத் தடைச்சட்டம் இலங்கைக்குள்ளும் சர்வதேச அளவிலும் பரவலாக விமர்சிக்கப்பட்டுள்ளது. சமீபத்தில், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் 14 ஆண்டுகளாக தடுத்துவைக்கப்பட்டிருந்த மூன்று நபர்கள் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டனர். இது மிக நீண்டகாலமாக இடம்பெற்ற துஷ்பிரயோகத்திற்கு உதாரணமாகுமென ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான சிவில் சமூக கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அறிக்கையொன்றை நேற்று (20) வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் சிவில் சமூகத்தின் அங்கத்தவர்களாகிய நாங்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கு ஆதரவளிக்கும் அதேவேளை, அதனை மாற்றுவதற்காக அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை விட மோசமான பல அம்சங்களைக் கொண்டிருப்பதையிட்டுக் கவலையடைகின்றோம். அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் சமூக ஆர்வலர்களுக்குக் கிடைக்கும் ஜனநாயக வெளி மற்றும் உரிமைகளில் உத்தேச சட்டம் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும். முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தின் மோசமான அம்சங்களில் பயங்கரவாதம் பற்றிய தெளிவற்ற மற்றும் மட்டுப்பாடற்ற வரையறை உள்ளது,

இதில் அரசாங்க சொத்துத் திருட்டு மற்றும் தொழிற்சங்க நடவடிக்கைகளும் உள்ளடங்கும். ஆர்ப்பாட்டங்கள், வெளியீட்டுப் பொருட்கள், அரசாங்கத்தின் நடவடிக்கைக்கான கோரிக்கைகள், வேலைநிறுத்தங்கள், இன மற்றும் மத வழிபாட்டிடங்கள் தொடர்பான பிணக்குகள் உள்ளிட்ட சட்டபூர்வமான ஜனநாயக நடவடிக்கைகளும் இதில் அடங்கும். பொலிஸ் அல்லது இராணுவம் அல்லது கடலோரக் காவல்படையினர் எந்த தரத்தில் இருந்தாலும், அவர்கள் மேலே கூறப்பட்டதைப்போன்ற செயல்களில் ஈடுபட்டதாக நியாயமான சந்தேகம் கொண்ட எவரையும் கைதுசெய்ய சட்டம் அனுமதிக்கிறது.

ஒரு நபர் கைதுசெய்யப்பட்டவுடன், அவர் 24 மணிநேரம் வரை தடுப்புக்காவலில் வைக்கப்படலாம், மேலும் சூழ்நிலையைப் பொறுத்து, கைதுசெய்பவர்கள் தேர்ந்தெடுக்கும் இடத்தில் அப்படி கைதுசெய்யப்பட்ட ஒரு இளைஞனின் அவலநிலையை நினைத்துப் பார்க்க முடியும். அதன்பிறகு, காவலில் வைக்கும் உத்தரவில் மூத்த பொலிஸ் அதிகாரி கையெழுத்திட்டால், கைதுசெய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தாமல் மூன்று மாதங்கள் வரை தடுப்புக்காவலில் வைக்க முடியும். இந்த விதிகள் அனைத்தும் இச்சட்டத்தை துஷ்பிரயோகம் செய்வதற்கான மகத்தான சாத்தியக்கூறுகளை நிரூபிக்கின்றன.

ஜனநாயகத்திற்கான சிவில் சமூகக் கூட்டமைப்பு என்ற வகையில் நாங்கள் முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை கடுமையாக எதிர்க்கிறோம், ஏனெனில், இது அரசியலமைப்பை மீறுகிறது. ஒரு ஜனநாயக சமூகத்தில் உத்தரவாதம் அளிக்கப்படும் சுதந்திரங்கள் மற்றும் மனித உரிமைகளை ஆபத்தில் ஆழ்த்துகிறது. இச்சட்டம் மிகவும் பரந்துபட்டது. இச்சட்டத்திற்கமைய யாரையும் கைதுசெய்யலாம், யாராலும் கைதுசெய்யப்படலாம். எந்த நோக்கத்திற்காக அவர்கள் கைதுசெய்யப்படுகிறார்கள் என்பது மட்டுப்படுத்தப்படவில்லை.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை மோசமாகும். கடந்த ஆண்டு 8 சதவீதத்துடன் கூடுதலாக இந்த ஆண்டு மேலும் நான்கு சதவீதமாக சுருங்கும் பொருளாதாரம் கொண்ட நிலைமை வெகுஜனங்களுக்கு மிகவும் கடினமாவே அமைந்துள்ளது. மக்கள் எந்தத் தவறும் செய்யாமல், ஆட்சி செய்தவர்களால் நாடு வங்குரோத்தடைந்துள்ளது. கேள்வி கேட்கவும், தில்லுமுல்லுகளை அம்பலப்படுத்தவும், அரசாங்கத்துடன் முரண்படவும் இடமளித்து, பேரிடருக்குக் காரணமானவர்கள் பொருளாதாரச் சுமையை முழுவதுமாக மக்கள் சுமக்கச் செய்ய, முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் பயன்படும் என்று நாங்கள் அஞ்சுகிறோம்.

எனவே, இது தொழிற்சங்கங்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் சிவில் சமூகம் மத்தியில் அச்ச சூழலை உருவாக்கி, அதன்மூலம் நிலவும் ஜனநாயக பற்றாக்குறையை தீவிரப்படுத்தி இலங்கையர்களின் அடிப்படை உரிமைகளை மீறும்.

எனவே, அரசாங்கத்தால் முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை திரும்பப் பெறவேண்டும். ஜனநாயகம் மற்றும் குடிமக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அரசின் கடமையை மதிக்க வேண்டும். மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக சுதந்திரங்கள் தொடர்பான அரசின் சர்வதேச கடமைகளையும் கடப்பாடுளையும் நிலைநிறுத்த வேண்டும் என்று நாங்கள் கோருகிறோம் – என்றுள்ளது.

# மின்சாரத்துக்கான கேள்வி அதிகரிப்பு

## ஒரு மணிநேரத்துக்கு 49.53 ஜிகா வோட்ஸ் மின் உற்பத்திசெய்யப்படுவதாக தகவல்

நாட்டில் அண்மைக்காலங்களில் இல்லாத அளவுக்கு, நேற்று முன்தினம் (19) அதிக எரிசக்திக்கான கேள்வி பதிவுசெய்யப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு அறிவித்துள்ளது.

மின் உற்பத்திக்கு ஒரு மணி நேரத்துக்கு 49.53 ஜிகா வோட்ஸ் உற்பத்தி தேவைப்பட்டதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். டுவிட்டர் பதிவொன்றை வெளியிட்டே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அந்தப் பதிவில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, நேற்று (20) காலை பதிவுசெய்யப்பட்ட கேள்விக்கமைய, ஒரு மணி நேரத்துக்கு 50 ஜிகா வோட்ஸை விட அதிகமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் ஸ்தாபிக்கப்பட்ட ஹம்பாந்தோட்டை டீசலில் இயங்கும் ஜெனரேட்டர்கள் உட்பட சகல, மின்சார சபைக்குரிய அனல் மின் உற்பத்தி நிலையங்களும் மின் உற்பத்திக்காக பயன்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



நாட்டில் நிலவும் அதிக வெப்பநிலை காரணமாக மக்கள் பெரும் அசௌகரியங்களை சந்தித்து வருகின்றனர். கொழும்பு மக்கள் அதிக வெயிலில் நடமாடும்போது நேற்று (20) எடுக்கப்பட்ட படங்கள். (படப்பிடிப்பு – சமன் அபேசிறிவர்தன)

# அச்சுறுத்தல் விடுப்பதற்கு ரணிலுக்கு உரிமையில்லை

## இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

*(நா. தினுஷா)*

பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அச்சுறுத்தல் விடுக்க, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எந்தவொரு உரிமையும் இல்லை. அடக்குமுறையை பிரயோகிப்பதற்காகவே கல்வி சேவையை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்த முயற்சிக்கிறார். அவரின் இவ்வாறான செயற்பாடுகளுக்கு நாங்கள் பயங்கொள்ளப் போவதில்லை - என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயிர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு தொடர்பில் பாரதூர நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், நாட்டின் ஜனாதிபதி தன்னிச்சையான கருத்துகளை வெளியிட்டுள்ளார். கல்வியை அத்தியாவசிய சேவையாக அறிவித்து, பரீட்சை விடைத்தாள மதிப்பீட்டு நடவடிக்கைகளை அத்தியாவசியமாக்கி, அதற்கு சமுகமளிக்காதவர்களுக்கு குறித்த நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அறிவித்திருக்கிறார்.

ஆனால், அவ்வாறு செய்வதற்கு ஜனாதிபதிக்கு எங்கு அதிகாரம் இருக்கிறது. பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு நடவடிக்கைகள் ஆசிரியர்களால் சுயாதீனமாக முன்னெடுக்கப்படும் செயற்பாடாகும். 2022ஆம் ஆண்டு இடம்பெற்றிருக்கவேண்டிய பரீட்சையே இந்த வருடம் நடத்தப்பட்டது. ரணில் - ராஜபக்ஷ அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட எரிபொருள் நெருக்கடி, அரசியல் நெருக்கடி காரணமாகவே பரீட்சைகளுக்குத் தடை ஏற்பட்டிருந்தது. இந்நிலையிலேயே இவ்வாண்டு பரீட்சை முன்னெடுக்கப்பட்டது. கடந்த பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகளை முன்னெடுக்க எதிர்பார்த்திருந்தபோதும், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார்கள்.

அதேபான்று, தமக்கான கொடுப்பனவுகள் போதாது என்பதால் மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்கு விண்ணப்பிக்காமல் இருந்தார்கள். அது தொழிற்சங்க நடவடிக்கை அல்ல. அது அவர்களின் சுயாதீனமான தீர்மானமாகும். 19 ஆயிரம் ஆசிரியர்கள் தேவைப்படுகின்ற சந்தர்ப்பத்தில், 12 பேர் வரையிலானவர்களே இதற்கு விண்ணப்பித்திருந்தார்கள். எனவே, இதுதொடர்பில் கலந்துரையாடி தீர்வொன்றை பெற்றுக்கொள்வதற்குப் பதிலாக தொடர்ச்சியாக கல்வி அமைச்சு, பரீட்சை காலதாமதமாகும், பிரச்சினை ஏற்படும் என்றே கூறிவந்தது.

இதற்கிடையிலேயே, பதவி அதிகாரத்தைக்கொண்டு இந்த மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்கு வராவிட்டால் கடுமையான நடவடிக்கை எடுப்போம் என்று ஜனாதிபதி அறிவித்திருக்கிறார். இதற்கு முன்னரும் ருஹுணு பல்கலைக்கழகத்தில் உப வேந்தர் தொடர்பில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் எதிர்ப்பை வெளியிட்டிருந்தபோதிலும், அந்த பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்களுக்கும் ஜனாதிபதி கடுமையான அச்சுறுத்தலை விடுத்திருந்தார். எதற்காக, பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஜனாதிபதி இவ்வாறு அச்சுறுத்தல் விடுக்கிறார் என்பது புரியவில்லை. அவருக்கு இருக்கும் உரிமை என்ன? கலந்துரையாடலுக்கு நாங்கள் தயாராக இருக்கும்போது எங்களை அச்சுறுத்தி இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்க முயற்சிப்பதுபோன்றே தெரிகிறது.

ஜனாதிபதி கூறுவதுபோன்று, கல்விச் சேவையை அத்தியாவசிய சேவையாக மாற்றுவதாயின் 2023ஆம் ஆண்டுக்கான பாட புத்தகங்களை மாணவர்களுக்கு வழங்கப்படவில்லை. அவர்களுக்கான சீருடை வழங்கப்படவில்லை. 2022ஆம் ஆண்டு முதலாம் தரத்துக்கு வந்த மாணவர்களுக்கான சீருடைகள் இதுவரையில் பெற்றுக்கொடுக்கப் படவில்லை. அவர்களின் கல்விக்குத் தேவையான எந்த வசதிகளும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை. அடக்குமுறைக்காகவே கல்விச் சேவையை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்த முயற்சிக்கிறார். இவ்வாறான செயற்பாடுகளுக்கு நாங்கள் பயங்கொள்ளப்போவதில்லை - என்றார்.

# இந்திய கண் சொட்டு மருந்துகளைப் பயன்பாட்டிலிருந்து நீக்க அனைத்து வைத்தியசாலைகளுக்கும் அறிவிப்பு

இந்தியாவிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்ட Prednisolone கண் சொட்டு மருந்துகளை உடனடியாக பயன்பாட்டிலிருந்து நீக்குமாறு சுகாதார அமைச்சு அனைத்து வைத்தியசாலைகளின் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளது.

Prednisolone கண் சொட்டு மருந்துகளை வைத்தியசாலைகளுக்கு வழங்குவதும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட மூன்று நோயாளிகள் Prednisolone பயன்படுத்தியதன் பின்னர் சில சிக்கல்களை எதிர்கொண்டதையடுத்து, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேசிய கண் வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சைகளின் பின்னர் ஒரே சந்தர்ப்பத்தில் மூன்று நோயாளர்களுக்கு தொற்று ஏற்பட்டதாக வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன், அறுவை சிகிச்சைக்கு பயன்படுத்தப்பட்ட அனைத்து மருந்துகளும் பரிசோதனைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

48 மணித்தியாலங்களின் பின்னர் கிடைத்த அறிக்கைக்கமைய, நோய்த்தொற்றுக்குக் காரணமான மருந்து கண்டறியப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளான நோயாளர்களுக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்ட சிகிச்சை நிலையங்களில் கிருமிகள் இருக்கலாம் என்ற அடிப்படையில், கண் வைத்தியசாலையை மூடுவதற்கு நடவடிக்கை எடுத்ததாக தேசிய கண் வைத்தியசாலையின் பேச்சாளர் கூறினார்.

இதேவேளை, சர்ச்சைக்குள்ளான கண் மருந்தை பயன்படுத்துவது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் தற்காலிமாக நிறுத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் Prednisoloneஐ பயன்படுத்திய ஒருவருக்கு கண்ணில் தொற்று ஏற்பட்டதைத் தொடர்ந்து, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் கூறினார்.

நுவரெலியா வைத்தியசாலையிலும் இந்த மருந்து பயன்பாட்டின் பின்னர் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

# யாழில் வோட்டர் ஜெல் குச்சிகள் மீட்பு



யாழ்ப்பாணம் கொழும்புத்துறை உதயபுரம் பகுதியில் 25 வோட்டர் ஜெல் குச்சிகள் நேற்று முன்தினம் (19) மீட்கப்பட்டுள்ளன.

ஊர்காவற்றுறை கடற்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் கடற்கரைக்கு அண்மையில் இருந்த பற்றைக்காடு ஒன்றினுள் குறித்த வோட்டர் ஜெல் குச்சிகள் மீட்கப்பட்டுள்ளன.

கடற்படையின் வெடிகுண்டு செயலிழப்பு பிரிவினரால் அவை மீட்கப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைக்காக அவை கடற்படை முகாமுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பெல்லன்வில சுவரோவியப் புகைப்படப் புத்தக வெளியீடு

பெல்லன்வில வரலாற்றுச் சிறப்புமிக்க விகாரையில் பிரதான விகாரையினுள் வரையப்பட்டுள்ள சுவரோவியங்களை அடிப்படையாக வைத்து விஸுவல் பொயட்ரி ஒவ் பெல்லன்வில கவிதைக் காணொளி எனும் பெல்லன்வில சுவரோவியப் புகைப்படப் புத்தகம் அச்சிடப்பட்டு, மக்கள் மயப்படுத்தும் நிகழ்வு இம்மாதம் 28ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளதாக பெல்லன்வில ரஜமகா விகாரையின் விகாராதிபதி பேராசிரியர் பெல்லன்வில தம்மரதன தேரர் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (20) இடம்பெற்ற பெல்லன்வில சுவரோவிய புகைப்படப் புத்தகம் வெளியிடும் நிகழ்வு தொடர்பாக அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இது தொடர்பாக கருத்துத் தெரிவித்தார்.

சம்மானீத விருது பெற்ற பேராசிரியர் சுனில் ஆரியரத்தின, சாருலதா விருது பெற்ற அபேசேகர, தெவராதந்திரி டபிள்யு.எம்.கே.விஜயபண்டார, லால் ஹேகொட, சரத் பெரேரா, சம்மானீத பேராசிரியர் சரத் சந்திரஜீவ போன்றவர்களின் பங்களிப்புடன் இந்நூல் வெளியிடப்படவுள்ளது.

இந்நூலை மக்கள் மயப்படுத்தும் சந்தர்ப்பத்தில் காலஞ்சென்ற பேராசிரியர் பெல்லன்வில விமலரதன அனுநாயக்க தேரரை நினைவுகூரும் தபால் முத்திரை மற்றும் முதல் நாள் உறை ஆகியன வெளியிடப்படவுள்ளதுடன், இத்தனிச்சிறப்பு மிக்க விகாரையின் ஓவியத்திற்கு உயிர் கொடுத்த மாபெரும் கலைஞரான சோமபந்து வித்யாபதியின் பிறந்த நாள் நூற்றாண்டு விழாவும் நடைபெறவுள்ளது.

# தரம் 6இற்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான மேன்முறையீடுகளை ஒன்லைனில் மேற்கொள்ளலாம்

2022ஆம் ஆண்டு நடைபெற்ற 05ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில், 2023ஆம் ஆண்டுக்கான 06ஆம் தரத்திற்கு அனுமதிப்பதற்கான மேன்முறையீட்டு விண்ணப்பங்களை இணையவழி (Online) மூலமாக பெற்றுக்கொள்ள கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

விண்ணப்பங்கள் நேற்று (20) மதியம் 12.00 முதல் 08 மே 2023 நள்ளிரவு 12.00 வரை ஏற்றுக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இணையவழி ஊடாக விண்ணப்பங்களை https://g6application.moe.gov.lk/#/ என்ற இணையதளத்திற்குச் சென்று சமர்ப்பிக்கலாம்.

மேலும், பாடசாலை விண்ணப்பம் தொடர்பான பாடசாலை கணக்கெடுப்பு எண் (Census No.) கொண்ட ஆவணத்தை www.moe.gov.lk என்ற இணையதளத்திற்குச் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

# உடப்பில் சித்திரைச் செவ்வாய் முளைக்கொட்டு





*(உடப்பு செய்தியாளர்)*

உடப்பு கிராமத்திலுள்ள பாரம்பரிய வழிபாட்டு மரபில் உள்ள சித்திரைச் செவ்வாய் முளைக்கொட்டு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை (16) முளைப்பதித்தல் மூலம் ஆரம்பமானது.

முளைக்கொட்டு இரண்டாவது நாளான நேற்று (20) சின்னக்கொளனியிலுள்ள கருமுத்துமாரியம்மன் ஆலய முன்றலில் இடம்பெற்றது. கடைசி முளைக்கொட்டு எதிர்வரும் (26) திகதி உடப்பின் பல இடங்களில் இடம்பெறவுள்ளது.

இந்த உஷ்ணமான காலத்தில் மழையை வேண்டியும், அம்மை நோய் கூடுதலாக மக்களுக்கு ஏற்படுவதாலும், அதனை நிவர்த்திசெய்ய மாரியம்மன் தெய்வத்திடம் வேண்டியும் இந்த நிகழ்வு இடம்பெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.


ජාතික ලොතරැයි මණ்ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன்கிழமை 2023.04.19
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5091 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 4 4 5 1 4 3

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3333 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 97,166,683.04
ஆங்கில எழுத்து O — வெற்றி இலக்கங்கள் 05 23 34 71

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1546 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.12,321,101.60
வெற்றி இலக்கினம் — வெற்றி இலக்கங்கள் 5 1 1 3 9 9

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1121 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 86,642,837.20
ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 07 34 38 69

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 400 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,500,000.00
வெற்றி இலக்கினம் மீனம் — வெற்றி இலக்கங்கள் 09 10 33 57 — விசேட இலக்கினம் மீனம்

மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1439 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 315,360,734.00
ஆங்கில எழுத்து M — சுப்பர் இலக்கம் 24 — வெற்றி இலக்கங்கள் 59 61 62 72
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# புனித நோன்புப் பெருநாள் வாழ்த்து...

## இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் அல்கஹ்தானி



அருள் நிறைந்த ஈதுல் பித்ர் திருநாளில், இலங்கை வாழ் அனைத்து மக்களுக்கும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஈத் அல்-பித்ர் திருநாள் என்பது மன்னிப்பு, அன்பு மற்றும் இரக்கத்திற்கான நாளாகும். இக்குணாதிசயங்கள்தான் இஸ்லாத்தின் அடிப்படை. ஈத் என்பது மகிழ்ச்சி மற்றும் கொண்டாட்டத்தின் நாள். அயலவர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருடனும் சமாதானம் பேணவேண்டிய நாள்.

இந்த மங்களகரமான சந்தர்ப்பம், உறவு முறை, சமாதானம் ஆகியவற்றின் பிணைப்பை புத்துயிர் பெறச்செய்வதற்கும், ஒருவருக்கொருவர் சகிப்புத்தன்மை மற்றும் அன்பை வெளிப்படுத்துவதற்கும் வாய்ப்பளிக்கிறது. இந்த நன்நாள் அனைவருக்கும் அமைதி, மகிழ்ச்சி மற்றும் செழிப்பை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன்.

## மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட்



நோன்புப் பெருநாளின் சௌபாக்கியங்கள் சகல முஸ்லிம் சகோதரர்களதும் வாழ்வில் மகிழ்ச்சியை ஏற்படுத்த பிரார்த்தித்து, வாழ்த்து வதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

புனித நோன்புப் பெருநாள் தினத்தை முன்னிட்டு, அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது,

"இறையியல் கோட்பாடுகளில் உன்னத இலட்சியமுடையது புனித நோன்பு. இந்த அருள்மிகு மாதத்தை அல்லாஹ்வின் திருப்தியுடன் கழிக்கக் கிடைத்தமைக்கு முதலில் நாம் அவனுக்கு நன்றி செலுத்துவோம். இறைவனின் திருப்திக்காக மட்டுமே நாம் நோன்பு நோற்றோம். பாவக்கறைகளைப் போக்குவதற்கு நாம் செய்த நல்லமல்களை எல்லாம் வல்ல அல்லாஹ் ஏற்றுக்கொள்வானாக..!

ரமழான் தந்த பயிற்சியுடன் எதிர்வரும் காலங்களில் ஒரு வரையறைக்குள் வாழப் பழகுவோம். இந்நன்னாளில் சகோதர வாஞ்சையுடன் பழகி, சகலரையும் சந்தோஷப்படுத்துவோராக முஸ்லிம்கள் மாற வேண்டும். கடந்த காலங்களை விடவும் இனி எமது எதிர்காலம் முன்னோக்கி நகர வேண்டும். முஸ்லிம் சமூகத்தின் எதிர்பார்ப்புகள் இழுத்தடிக்கப்படாத புதிய யுகம் ஒன்று உருவாக நாம் இந்தப் பெருநாள் தினத்தில் பிரார்த்திப்பது அவசியம். எந்த விடயமானாலும் எல்லோரும் திருப்திப்படும் வகையில் அமைவதுதான் சமூக ஐக்கியத்துக்கு வலுச்சேர்க்கும். இந்த ஐக்கியத்தை அடித்தளமாகக் கொண்டுதான் எமது எதிர்கால செயற்பாடுகள் இருக்கும். அனைவருக்கும் "ஈதுல் பித்ர்" நோன்புப் பெருநாள் நல்வாழ்த்துகள்" என்று தெரிவித்துள்ளார்.

## இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான்



அருள் நிறைந்த இவ் ரமழான் எமது துயர இருள்களை நீக்கி நாட்டிலே அன்பும் சுபீட்சமும் ஓங்க வழிகாட்டி செல்லட்டும். உலகெலாம் ஈதுல் பித்ரை கொண்டாடும் பல கோடி இஸ்லாமிய நெஞ்சங்களுக்கு எனது இனிய நோன்புப் பெருநாள் நல்வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்வதுடன், சங்கை மிகு இப்பெருநாள் தினத்தில் முழு உலக அமைதிக்கும் எமது தாய்நாட்டின் நிம்மதியான வாழ்விற்கும் எல்லாம் வல்ல அல்லாஹுத்தஆலாவிடம் மனமுருகிப் பிரார்த்திப்போமாக – என கிராமியப் பொருளாதாரப் இராஜாங்க அமைச்சர் கே.காதர் மஸ்தான் விடுத்திருக்கும் ரமழான் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, புனித நோன்பு எம்மிடமிருந்து விடைபெற்றுச் சென்றுள்ளது. அது எமக்கு இறையச்சம், கருணை, பொறுமை என பல பாடங்களை போதித்துச் சென்றுள்ளது.

மேலும் எமது புனித மார்க்கமானது அமைதி, இரக்கம், ஒற்றுமை, மனிதநேயம், ஜீவகாருண்யம் ஆகிய உயரிய குணவியல்புகளை தன்னகத்தே கொண்டுள்ளது என்பதையும் நாம் திடமாகவும் உறுதியாகவும் அறிந்துவைத்துள்ளோம்.

இன்று எமது நாடு எதிர்நோக்கியுள்ள அசாதாரண சூழ்நிலையில் நாம் கொண்டுள்ள உயரிய குணவியல்புகள் மூலம் எமது ஒற்றுமைமிக்க தாய்நாட்டைக் கட்டியெழுப்ப உறுதி பூணுமாறு உங்களை அன்போடு கேட்டுக்கொள்வதோடு, கண்ணியமிக்க ரமழான் மாதத்தில் நாம் எடுத்துக்கொண்ட பயிற்சிகளையும் செய்துவந்த இபாதத்துக்களையும் தொடர்ந்து செய்வதுடன், வசதியற்றிருக்கும் எமது சகோதரர்களை இனங்கண்டு தானதர்மங்களை செய்து இறைவனின் நல்லருளை பெற்ற நல்லடியார்களாக மாறுவோமாக.

## அஷ்ஷெக் எம்.எஸ்.எம்.தாஸீம் உதவிப் பொதுச் செயலாளர் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா



மஸ்ஜித்கள் அல்லாஹு தஆலாவின் இல்லங்களாகும். அவற்றை கண்ணியப்படுத்துவதும் பேணிப் பாதுகாப்பதும் ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமையாகும்.

இறைத்தூதர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். மஸ்ஜிதுல் ஹராம், மஸ்ஜிதுந் நபவீ, மஸ்ஜிதுல் அக்ஸா ஆகிய மூன்று பள்ளிவாசல்களுக்குத் தவிர, வேறெந்தப் பள்ளிவாசலுக்கும் நல்லெண்ணப் பிரயாணங்கள் மேற்கொள்ளப்படாது.

இப்புனிதத் தலங்கள் மூன்றையும் பாதுகாப்பதும் பராமரிப்பதும் முஸ்லிம் உம்மத்தின் நம்பிக்கைக் கோட்பாடு (அகீதா) ரீதியான கடமையாகும். எனவே, தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் நெருக்கடிகளையும் பிரச்சினைகளையும் எதிர்கொள்கின்ற அத்தனை மஸ்ஜித்களுக்கும், உலக முஸ்லிம்களின் பாதுகாப்புக்காகவும் குறிப்பாக அல்அக்ஸா மஸ்ஜிதைச் சூழ வாழ்கின்ற பலஸ்தீன் மக்களுக்காகவும் சகல வணக்கங்களின்போதும் குறிப்பாக, இரவுநேர வணக்கங்களின் போதும் துஆ செய்யுமாறு கண்ணியத்துக்குரிய இமாம்கள், ஹாபிழ்கள் மற்றும் சகல முஸ்லிம்களிடமும் ஜம்இய்யா அன்பாக வேண்டிக்கொள்கின்றது.

அல்லாஹு தஆலா உலகளாவிய முஸ்லிம்களையும், மஸ்ஜித்களையும், மத்ரஸாக்களையும் பாதுகாப்பதோடு எம்மனைவரையும் பொருந்திக்கொண்டு அவனது மார்க்கத்தில் நிலைத்திருக்கச் செய்வானாக.

## முன்னாள் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் மற்றும் தபால்துறை அமைச்சர் எம்.எச்.ஏ.ஹலீம்



இஸ்லாமியர்களாகிய நாங்கள் நோன்பு நோற்று அதன் பண்பினைப் பேணி இன்று பெருநாளைக் கொண்டாடும் மகிழ்ச்சிகரமான தினத்தில் இலங்கை வாழ் அனைத்து முஸ்லிம் மக்கள் அனைவருக்கும் ஈதுல் பித்ர் நோன்பு பெருநாள் நல் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன் – என்று முன்னாள் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் மற்றும் தபால் துறை அமைச்சர் எம்.எச்.ஏ.ஹலீம் தெரிவித்தார்.

நோன்புப் பெருநாளை முன்னிட்டு முன்னாள் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் மற்றும் தபால்துறை அமைச்சரும் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எச்.ஏ.ஹலீம் விடுத்துள்ள பெருநாள் வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் நோன்பு காலத்தில் தன்னடக்கம், நாவடக்கம், உணவுக் கட்டுப்பாடு, சமூக நலன்களைப் பேணி நல்ல பண்புகளைப் பெற்ற நாம் நறுமணம் கமழும் இந்த நோன்பு பெருநாள் தினத்தில் அன்பு, பாசம், மனிதநேயம் எல்லா இல்லங்களிலும் பூத்துக் குலுங்க ஒற்றுமையின் மகத்துவத்தை நன்கு உணர்ந்து பெருநாளை சந்தோஷத்துடன் கொண்டாடுவது அவசியமாகும். அப்பொழுதுதான் இந்த நோன்பென்ற மழையில் நனைந்த அனைவரும் அகிலத்தையே வெற்றிக்கொள்ளக்கூடிய பக்குவத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

எனவே இந்த இனிய நன்னாளில் பெருநாளைக் கொண்டாடும் முஸ்லிம்களாகிய உங்கள் அனைவருக்கும் புனித நோன்புப் பெருநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் முன்னாள் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி



ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாளைக் கொண்டாடும் இலங்கை வாழ் அனைத்து முஸ்லிம் மக்களுக்கும் என்னுடைய இதயம் கனிந்த இனிய பெருநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமிதம் அடைகின்றேன் – என்று அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் முன்னாள் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி தெரிவித்தார்.

நோன்பு காலம் என்பது முஸ்லிம் களின் வசந்த காலமாகும். அந்தளவுக்கு ரமழானில் மகத்துவமிக்க நன்மைகள் பொதிந்துள்ளன. இப்புனித மாதத்தில் கற்றுக்கொண்ட வாழ்க்கைப் பாடத்தையும் படிப்பினைகளையும் எதிர்வரும் காலங்களில் நாம் ஒவ்வொரு எடுத்து, நடத்தல் அவசியமாகும்.

எனவே, எமக்கிடையே காணப்படும் கருத்து முரண்பாடுகளை மறந்து எதிர்காலத்தில் ஒற்றுமையுடனும் பரஸ்பர நல்லெண்ணத்துடனும் சகவாழ்வுடனும் வாழ வேண்டும் என்று வேண்டிக்கொள்வதோடு எனது இதயம் கனிந்த பெருநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான்



"பல்லின சமூகம் வாழும் இலங்கைத் திருநாட்டில், பொருளாதாரம் மேம்பட்டு – பிரச்சினைகள் தீரவேண்டுமெனில் இன ஒற்றுமையும், மத நல்லிணக்கமும் மிகவும் அவசியமாகும். எனவே, இலங்கைத் தாயின் பிள்ளைகளாக நாம் அனைவரும் ஒன்றிணைந்து பயணிப்போம். "

– இவ்வாறு இ.தொ.காவின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

ஜீவன் தொண்டமானின் வாழ்த்துச்செய்தி வருமாறு;

"இலங்கையில் முடியாட்சியின்போதும் சரி, குடியாட்சியின்போதும் சரி இந்த நாடு மேம்பட வேண்டுமென பாடுபட்டவர்களே எமது முஸ்லிம் சகோதரர்கள். எவ்வளவுதான் நெருக்கடிகள் வந்தாலும் ஈகை குணத்தை அவர்கள் கைவிட்டதில்லை. இஸ்லாம் மதம் போதிக்கும் நல்ல விடயங்களை பின்பற்றி வாழ எத்தனிப்பவர்கள். அந்தவகையில் இம்முறை பெருநாளைக் கொண்டாட தயாராகும் இலங்கை மற்றும் உலக வாழ் முஸ்லிம் மக்களுக்கு ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இலங்கையில் பெருந்தோட்டத்துறையில் பல முஸ்லிம் சகோதரர்கள் முதலாளிமார்களாக உள்ளனர். எனவே, தொழிலாளர்களின் வாழ்வு மேம்பட அவர்கள் மேலும் பல நகர்வுகளையும் மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையையும் இந்த நன்னாளில் முன்வைக்கின்றேன்.

இலங்கையில் நோன்புப் பெருநாள் காலங்களில் எமது இஸ்லாமிய சொந்தங்களுக்கு எதிராக சில விஷமிகள் சில தீய செயல்களை கட்டவிழ்த்துவிடுவது நடந்து வருகின்றது. இவ்வாறான நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும், நாட்டில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டவும் எமது குரல் எப்போதும் ஒலிக்கும்.

இருப்பவர்கள், இல்லாதவர்களுக்கு கொடைகளை வழங்கி அனைவருமாக அன்போடும், பண்போடும், இறைபக்தியோடும் பெருநாளை கொண்டாடுவோம்" – என்றுள்ளது.

# 'வசத் சிரிய - 2023' புத்தாண்டுப் போட்டிகளின் பரிசு விபரங்கள் அறிவிப்பு

கொழும்பு சங்கிரீலா திடலில் ஏப்ரல் 22ஆம் திகதி நடைபெறவிருக்கும் 'வசத் சிரிய - 2023' தமிழ் - சிங்களப் புத்தாண்டுப் போட்டி நிகழ்வுகளை மக்கள் பெரிதும் எதிர்பார்த்துள்ள நிலையில், புத்தாண்டு அழகன் - அழகிப் போட்டிகள், மரதன் ஓட்டப் போட்டி மற்றும் சைக்கிளோட்டப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் பெருமளவில் கிடைத்துள்ளன.

'வசத் சிரிய - 2023' அழகிப் போட்டியில் பங்கெடுக்க 20 முதல் 35 வயதிற்குட்பட்ட யுவதிகளுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. 'வசத் சிரிய - 2023' புத்தாண்டு அழகியாக கிரீடத்தை சுவீகரிப்பவருக்கு தங்கப் பரிசுடன் 1,50,000 பணப்பரிசு மற்றும் ஏனைய பரிசுகள் பலவும் வழங்கப்படும். இரண்டாம் இடத்திற்கு 1,00,000 பணப்பரிசும் ஏனைய பரிசுகளும் வழங்கப்படும் அதேநேரரம் மூன்றாம் இடத்திற்கு 50,000 பணப்பரிசும் ஏனைய பரிசுகளும் வழங்கப்படும்.

'வசத் சிரிய - 2023' புத்தாண்டு அழகனாக கிரீடத்தை சுவீகரிப்பவருக்கு 1,50,000 பணப்பரிசு மற்றும் ஏனைய பரிசுகள் பலவும் வழங்கப்படும், இரண்டாம் இடத்திற்கு 1,00,000 பணப்பரிசும் ஏனைய பரிசுகளும் வழங்கப்படும் அதேநேரம் மூன்றாம் இடத்திற்கு 50,000 பணப்பரிசும் ஏனைய பரிசுகளும் வழங்கப்படும்.

இதுவரையிலும் விண்ணப்பிக்காதவர்கள் விண்ணப்படிவங்களைப் பூர்த்திசெய்து chiefacct.pd@presidentsoffice.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு இன்று பிற்பகல் 3.00 மணிக்கு முன்னதாக, 03 மாதங்களுக்குள் எடுக்கப்பட்ட வர்ணப் புகைப்படத்துடன் அனுப்பிவைக்க வேண்டும்.

மேலதிக தகவல்களை 0702025095, 0718 381 004 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும்.

மரதன் ஓட்டப் போட்டிகளில் 16 வயதுக்கு மேற்பட்ட வீர, வீராங்கனைகள் பங்குபற்றலாம். போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் 20 கிலோ மீற்றர்களுக்கும் அதிகமான தூரம் ஓடக்கூடியவர்கள் என வைத்திய சான்றிதழுடன் 2023 ஏப்ரல் 21 ஆம் திகதி 12.00 மணிக்கு முன்பாக Priyanthalalwkas@gmail.com மின்னஞ்சல் முகவரி அல்லது WhatsApp எண் 0710573828 ஊடாகவும் அவற்றை அனுப்பலாம்.





மரதன் போட்டிகளின் (ஆண்கள்) முதலாமிடம் பெறுபவருக்கு 75,000 ரூபாவும் இரண்டாம் இடம் பெறுபவருக்கு 50,000 ரூபாவும் மூன்றாமிடம் பெறுபவருக்கு 30,000 ரூபாவும் வழங்கப்படும். நான்கு தொடக்கம் பத்து வரையிலான இடங்களைப் பெறுவோருக்கு 10,000 ரூபா வீதம் வழங்கப்படும்.

மரதன் போட்டிகளின் (பெண்கள்) முதலாமிடம் பெறுபவருக்கு 50,000 ரூபாவும் இரண்டாம் இடம் பெறுபவருக்கு 30,000 ரூபாவும் மூன்றாமிடம் பெறுபவருக்கு 20,000 ரூபாவும் வழங்கப்படும். நான்கு தொடக்கம் பத்து வரையிலான இடங்களைப் பெறுவோருக்கு 7,500 ரூபா வீதம் வழங்கப்படும்.

ஸ்டேண்டட் சைக்கிளோட்டப் போட்டிகள் (ஆண் /பெண்) நாடு தழுவிய ரீதியில் நடத்தப்படவுள்ள நிலையில், 1973 வருடத்திற்கு பின்னரும் 2004ஆம் ஆண்டிற்கு முன்னரும் பிறந்த இலங்கை சைக்கிளோட்ட (ஆண்/ பெண்) வீர வீராங்கனைகள் இப்போட்டியில் பங்குபற்றலாம். போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் வைத்திய சான்றிதழுடன் 2023 ஏப்ரல் 21 ஆம் திகதி 10.00 மணிக்கு முன்பாக wasathsiriya2023race@gmail.com மின்னஞ்சல் முகவரி அல்லது WhatsApp எண் 0788429688 ஊடாகவும் அவற்றை அனுப்பலாம்.

ஸ்டேண்டட் சைக்கிளோட்டப் போட்டிகள் (ஆண்கள்) முதலாம் இடத்திற்கு 1,00,000 ரூபாவும், இரண்டாம் இடத்திற்கு 75,000 ரூபாவும், மூன்றாம் இடத்திற்கு 50,000 ரூபாவும், நான்காம் இடத்திற்கு 30,000 ரூபாவும் ஐந்தாம் இடத்திற்கு 20,000 ரூபாவும் 6 – 10 வரையான இடங்களுக்கு 9,000 ரூபா வீதமும் 11-15ஆம் இடங்களுக்கு 5,000 ரூபா வீதமும் வழங்கப்படவுள்ளது.

பெண்களுக்கான போட்டியில் முதலாமிடம் பெறுபவருக்கு 50,000 ரூபாவும், இரண்டாம் இடத்திற்கு 40,000 ரூபாவும், மூன்றாம் இடத்திற்கு 30,000 ரூபாவும், நான்காம் இடத்திற்கு 20,000 ரூபாவும் ஐந்தாம் இடத்திற்கு 15,000 ரூபாவும் 6 – 10 வரையான இடங்களுக்கு 9,000 ரூபா வீதமும் வழங்கப்படவுள்ளது.

கயிறு இழுத்தல் போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் புத்தாண்டு நிகழ்வுகள் ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னதாக ஏற்பாட்டுக் குழுவினருக்கு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறும் வகையில் அனுப்பிவைக்க முடியும் என்பதோடு, மேலதிக தகவல்களுக்கு 0717880695 எனும் இலக்கத்தைத் தொடர்புகொள்ளவும்.




# ஷவ்வால் மாத தலைப்பிறையை தீர்மானிக்கும் மாநாடு இன்று

ஷவ்வால் மாத தலைப்பிறையை தீர்மானிக்கும் மாநாடு இன்று (21) இடம்பெறவுள்ளதாக கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது.

மஹ்ரிப் தொழுகையின் பின்னர் இன்று தலைப்பிறையை தீர்மானிக்கும் மாநாடு இடம்பெறவுள்ளது.

கொழும்பு பெரிய பள்ளிவாசல் நிர்வாகிகள், பிறைக்குழு உறுப்பினர்கள், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

புனித ரமழான் மாதம் முழுவதும் நோன்பு நோற்ற முஸ்லிம் மக்கள் ஷவ்வால் மாத தலைப்பிறை தென்பட்டவுடன், ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாளைக் கொண்டாடவுள்ளனர்.

# பஸ் சேவையை ஒழுங்குபடுத்தும் புதிய டிஜிட்டல் முறை அறிமுகம்



எதிர்காலத்தில் நாட்டில் அனைத்து அரச நிறுவனங்களுக்கும் டிஜிட்டல் முறையை அறிமுகப்படுத்துவதன் மூலம் மக்கள் சேவையை வினைத்திறனுடன் மேற்கொள்ள முடியுமென போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

தனியார் பஸ்கள் உட்பட அனைத்து பஸ்களையும் ஒழுங்குபடுத்தும் புதிய டிஜிட்டல் வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்தும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது, அனைத்து பஸ்களையும் ஜி.பி.எஸ். தொழில்நுட்பம் மூலம் கண்காணிக்கும் வசதி, வீதி அனுமதி வழங்கும்போது முன்பு வழங்கப்பட்ட புத்தகத்திற்குப் பதிலாக QR குறியீடு கொண்ட டிஜிட்டல் அட்டை என்பன அறிமுகப்படுத்தப்பட்டன.

# வைத்தியர் பற்றாக்குறையால் எம்பிலிபிட்டிய வைத்தியசாலையில் சகல சிகிச்சைகளும் தடை

## இரு வாரங்களாக நோயாளர்கள் அவதி

வைத்தியர் பற்றாக்குறையால் எம்பிலிபிட்டிய மாவட்ட வைத்தியசாலையில் சகல சிகிச்சைகளும் கடந்த இரு வாரங்களாக தடைப்பட்டுள்ளன.

அதன் காரணமாக இந்த வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு வரும் நோயாளர்களை கராப்பிட்டிய, இரத்தினபுரி மற்றும் ஹம்பாந்தோட்டை வைத்தியசாலைகளுக்கு அனுப்பிவைக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளதாக அந்த வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளர் ரவீந்திர அபயசூரிய தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த வைத்தியசாலையில் கடமையாற்றிவந்த விசேட சிகிச்சை வழங்கும் வைத்தியர்கள் இருவரும் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். தற்காலிகமாக பணியாற்றிவந்த வைத்தியரும் விசேட பயிற்சிக்காக வெளிநாடு சென்றுள்ளார். சத்திரசிகிச்சை மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகளின் செயற்பாடுகளை தற்போது கடமையிலிருக்கும் வைத்தியர்களே முன்னெடுத்து வருகிறோம் - என்றார்.




வடக்கு, கிழக்கு பெண்கள் கூட்டின் ஏற்பாட்டில் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவுக்கு எதிராக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று (20) காலை 10.30 மணியளவில் யாழ். மாவட்ட செயலகம் முன்பாக இடம்பெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் சட்டத்தரணிகள், உரிமை செயற்பாட்டாளர்கள், சமூக ஆர்வலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# கம்பளை - நுவரெலியா பிரதான வீதியில் பெண்ணொருவரை மோதிவிட்டு தப்பிச் சென்ற பஸ்

## சாரதி – நடத்துனர் கைது





*(கலஹா செய்தியாளர்)*

கம்பளை - நுவரெலியா பிரதான வீதி இரட்டைப்பாதை பிரதேசத்தில் பெண்ணொருவரை மோதிவிட்டு தப்பிச் சென்றதாகக் கூறப்படும் பஸ்ஸை இரண்டு நாட்களின் பின்னர் பொலிஸார் நேற்று (20) கண்டுபிடித்துள்ளதுடன், பெண்ணின் இறப்பிற்கு காரணமான சாரதியையும் நடத்துனரையும் கைதுசெய்துள்ளனர்.

கடந்த 18ஆம் திகதி அதிகாலை 3 மணியளவில் புஸல்லாவை பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய சடலம் மீட்கப்பட்டு, விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. இந்நிலையில் அன்றைய தினம் 1.50 மணியளவில் வெலிமடையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்திருந்ததாகக் கூறப்படும் மேற்படி தனியார் பஸ்ஸை கைப்பற்றி அதன் சாரதியும் நடத்துனரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் மகளுடன் வசித்துவந்த குறித்த பெண், கடந்த 17ஆம் திகதி மாலை கொழும்பிலிருந்து பூண்டுலோயா நோக்கி பயணித்த பஸ்ஸில் பயணத்தை மேற்கொண்டு, இரட்டைப்பாதை பிரதேசத்தில் இறங்கியுள்ளதுடன், சங்குவாரி தோட்டப் பகுதியிலுள்ள தனது பிறிதொரு மகளை பற்றி விசாரித்துள்ளதாகவும் எனினும், மகளின் வீட்டை கண்டுபிடிக்க முடியாமல் வீதியில் அழைந்து திரிந்ததாகவும் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

சுமார் 70 வயது மதிக்கத்தக்க மேற்படி பெண்ணின் சடலம் கம்பளை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதோடு, உயிரிழந்தவரின் மகள் குறித்து தகவல் தெரிந்தவர்கள் பொலிஸாருக்கு அறிவிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

# போலி 5000 ரூபா நாணயத் தாள்களை அச்சிட்ட இருவர் மாத்தளையில் கைது

போலி நாணயத்தாள்களை அச்சிட்ட இருவர் மாத்தளை, அலவத்துகொடையில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

போலியான நாணயத்தாள்களை அச்சிட்டமை மற்றும் அவற்றை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டுகளின்கீழ் சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அலவத்துகொடையைச் சேர்ந்த 36 மற்றும் 41 வயதுடையவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் வசமிருந்த ஐயாயிரம் ரூபா போலி நாணயத்தாள்கள் 43உம், நாணயத்தாள்களை அச்சிடுவதற்குப் பயன்படுத்திய இயந்திரங்கள் என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்களில் ஒருவர் புகைப்படக் கலையகமொன்றை நடத்திச்செல்பவரெனவும் அங்குள்ள அச்சு இயந்திரத்தைப் பயன்படுத்தி போலி நாணயத்தாள்களை அச்சிட்டுள்ளமையும் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# அத்துருகிரியவில் வர்த்தகரின் கண்களில் மிளகாய்த்தூளை தூவி பணம் கொள்ளை

அத்துருகிரிய பகுதியில் கோழி இறைச்சி வர்த்தகர் ஒருவரின் கண்களில் மிளகாய்த்தூளை வீசி பணத்தைக் கொள்ளையிட்ட இரு பெண்கள் உள்ளிட்ட மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வர்த்தகருக்குச் சொந்தமான லொறியின் சாரதி, வர்த்தகரின் மனைவி மற்றும் பிறிதொரு பெண் ஆகியோரே இவ்வாறு கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

வர்த்தகர் மற்றும் சந்தேக நபர்கள் மூவரும் லொறியில் பயணித்துக்கொண்டிருக்கையில் அவசிய தேவை கருதி வாகனத்தை நிறுத்திய சந்தர்ப்பத்திலேயே வர்த்தகருக்கு மிளகாய்த்தூள் வீசப்பட்டுள்ளது.

அத்துடன், வர்த்தகரிடமிருந்து கொள்ளை யிடப்பட்டதாகக் கூறப்படும் ஒரு இலட்சத்து 86 ஆயிரத்து 500 ரூபா பணம் மீட்கப்பட்டுள்ளது.

மேலும் சந்தேக நபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை களை மேற்கொண்டு வருகின்றனர்.

# மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் பிரச்சினைகளைத் தீர்க்க புதிய இணையத்தளம்

மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையில் உள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண தேவையான நடவடிக்கைகள் 'ஹெல்ப் அபேக்ஷா' இணையத்தளத்தின் ஊடாக மேற்கொள்ளப்படவுள்ளதாக வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழுவின் தலைவர் பினர ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையில் இடம்பெற்ற விசேட நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டபோதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதேவேளை, அபேக்ஷா வைத்தியசாலைக் குழுவின் உப தலைவர் குமாரி வன்னியாராச்சி தனது பிறந்தநாளை முன்னிட்டு வைத்தியசாலைக்கு 5 இலட்சம் ரூபாவை நன்கொடையாக வழங்கினார்.

மேலும், எடேரமுல்லை லயன்ஸ் கழகம், மருத்துவமனையின் சிறுவர் பிரிவில் பெற்றோர் தங்கும் பகுதிக்கு குளிரூட்டும் அமைப்பை நிறுவுவதற்காக 4 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா தொகையும் இங்கு நன்கொடையாக வழங்கியது.

# MOP உரத்தின் விலையைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை

இவ்வருடம் நெற்செய்கைக்கான MOP உரத்தின் விலையை 4,500 ரூபாவால் குறைக்க அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பில் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதாகவும், தற்போது சந்தையில் எம்.ஓ.பி. உரத்தின் 50 கிலோகிராம் மூடை 18 ஆயிரத்து 500 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதால் அந்தத் தொகையை விவசாயிகளுக்கு ஏற்க சிரமமாக இருப்பதால் விலையைக் குறைக்கத் தீர்மானித்ததாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதன்படி அடுத்த வாரம் கூடவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

குறைந்த விலையில் உரங்களை வழங்குவதற்கு அரசாங்கத்திற்கு சொந்தமான இரண்டு உர நிறுவனங்களும் செயற்பட்டு வருவதால், இரசாயன உர விற்பனை தொடர்பில் சந்தையில் போட்டி உருவாகியுள்ளதோடு, இதன்மூலம் விவசாயிகள் பயனடைவதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, யூரியா உரத்தின் விலை குறைவடைந்துள்ளதால், எதிர்காலத்தில் TSP மற்றும் MOP ஆகிய உரங்களின் விலை மேலும் குறையும் என தனியார்துறை உர விற்பனையாளர்கள் அமைச்சரிடம் தெரிவித்துள்ளனர்.



சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நானுஓயா கிளாசோ மேற்பிரிவு பாரதி நற்பனி மன்றமும் நானுஓயா பொலிஸ் நிலையமும் இணைந்து நடத்திய மாபெரும் கலாசார விளையாட்டு நிகழ்வுகள் மிகவும் சிறப்பான முறையில் கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் கிளாசோ மைதானத்தில் நடைபெற்றன. (செ.திவாகரன்)



உடப்பு கிரிக்கெட் (யு.சி.சி.) சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் 11 அணிகள் பங்குபற்றி, இறுதிப்போட்டிக்கு 'வளர்மதி' மற்றும் 'புல் அன்டர்ஸ்'அணிகள் தெரிவாகி இரு அணிகளும் சிறப்பாக விளையாடி, இறுதியில் வளர்மதி விளையாட்டுக் கழகம் தனது வெற்றியை சுவீகரித்துக்கொண்டது. இதில் வளர்மதி அணிக்கு 50 ஆயிரம் ரூபாவும், வெற்றிக் கேடயமும், புல் அன்டர்ஸ் அணிக்கு 20 ஆயிரம் ரூபாவும் வெற்றிக் கேடயமும் வழங்கப்பட்டன. (உடப்பு செய்தியாளர்)

# காணிக்கையாக வழங்கிய யானைத் தந்தங்களை விற்க முயன்ற விகாராதிபதி பாணந்துறையில் கைது

காணிக்கையாக வழங்கிய யானைத் தந்தங்களை 50 இலட்சம் ரூபாவுக்கு கடத்தல்காரர்கள் ஊடாக விற்பனைசெய்யத் திட்டமிட்டதாகக் கூறப்படும் விகாராதிபதியை பாணந்துறை வலான ஊழல் ஒழிப்பு அதிரடிப் படையினர் கைதுசெய்துள்ளனர்.

பாணந்துறை வலான ஊழல் ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கமைய, மாத்தறை பிரதேசத்தில் நபர் ஒருவர் ஒரு ஜோடி தந்தத்தை விற்பனைசெய்ய கொள்வனவு செய்பவரை தேடுவதாக விசேட பொலிஸ் குழுவினருக்கு கிடைத்த தகவலையடுத்து சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது, பிடபெத்தர பிரதேசத்திலுள்ள விகாரை ஒன்றுக்கு இந்த யானைத் தந்தங்கள் காணிக்கையாக வழங்கப்பட்டமை தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதன்படி, மிகவும் இரகசியமான முறையில் மேற்கொள்ளப்பட்ட நீண்ட விசாரணையில் குறித்த சம்பவம் உறுதிப்படுத்தப்பட்டதை யடுத்து, 65 வயதான விகாராதிபதி கைது செய்யப்பட்டதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# உழைப்பாளர் தினக் கொண்டாட்டங்களுக்கு தயாராகும் மலையக தொழிற்சங்கங்கள்

(ஆ.ரமேஸ்)

மலையகத்தில் பிரபல தொழிற் சங்கங்கள் பல மே முதலாம் திகதி அனுஸ்டிக்கப்படும் உலக தொழிலாளர் தினமான மேதினத்தை இம்முறை பெருந் தோட்ட வாரியாக நடத்த தீர்மானித்துள்ளன.

அதேநேரத்தில் மலையகத்தில் இயங்கும் இடதுசாரி அரசியல் கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்கள்,உள்ளிட்ட வெகுஜன அமைப்புகள் அத்துடன் தோட்ட சேவையாளர் சங்கம் ஆகியவை பிரதான நகரங்களை தெரிவு செய்து மேதின நிகழ்வினை அனுஷ்டிக்கவுள்ளது.

அந்த வகையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அதன் மேதினத்தை அந்தந்த தோட்டங்களில் அனுஸ்ட்டிக்கும் என காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஏ.பி.சக்திவேல் தெரிவித்தார்.

அதேபோல தொழிலாளர் தேசிய சங்கத்தின் 58வது மேதின நிகழ்வும் இம்முறை தோட்டவாரியாக நடாத்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் நிதி காரியத்தையும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான சோ.ஸ்ரீதரன் தெரிவித்தார்.

மேதின நாளன்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஹட்டன் தலைமை காரியாலயத்தில் சங்கத்தின் கொடியேற்றப்பட்டு விசேட புஜையும் இடம்பெறும் என அவர் மேலும் தெரிவித்தார்.

மலையக மக்கள் முன்னணியின் தொழிற்சங்க பிரிவான மலைய தொழிலாளர் முன்னணி அதன் மேதின நிகழ்வினை தோட்டங்களில் அனுஷ்டிக்க தீர்மானித்துள்ளதாக முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

அதேநேரத்தில் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் அதன் மேதின நிகழ்வை இம்முறை பதுளை நகரில் வெகு விமர்சையாக அனுஷ்டிக்க உள்ளதாக சங்கத்தின் பொது செயலாளரும்,பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஸ் தெரிவித்தார்.

இந்த மேதின நிகழ்வில் நாடளாவிய ரீதியில் சங்கத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துக்கொள்ள உள்ளதாக அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுப்பையா சதாசிவம் தலைமையிலான இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் மேதின நிகழ்வு குறித்து இன்னும் ஒரிரு தினங்களில் முன்னணியின் முக்கிய உறுப்பினர்கள் ஒன்று கூடி முடிவெடுக்க உள்ளதாக சுப்பையா சதாசிவம் தெரிவித்தார்.

அதேநேரத்தில் மக்கள் விடுதலை முன்னணியின்(ஜே.வி.பி) தொழிற்சங்க பிரிவில் ஒன்றான அகில இலங்கை தோட்ட தொழிலாளர் சங்கம் அதன் பிரதான கட்சியான மக்கள் விடுதலை முன்னணியுடன் இணைந்து தலைநகர் கொழும்பில் மக்கள் பேரணியுடன் மேதினத்தை அனுஸ்ட்டிக்க உள்ளதாக சங்கத்தின் நிதி காரியதர்சி கிச்சன் கலைச்செல்வி தெரிவித்தார்.

அத்துடன் தேசிய ரீதியில் இயங்கும் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சி வடக்கு,கிழக்கு மலையகம் சார்ந்த பகுதிகளில் உள்ள நகரங்களில் மேதின நிகழ்வை நடத்த உள்ளதாக கட்சியின் தேசிய அமைப்பாளர் வெ.மகேந்திரன் தெரிவித்தார்.

அதேநேரத்தில் மலையகத்தில் நடைபெறவுள்ள மேதின நிகழ்வுகள் மாத்தளை மற்றும் இராகலையில் மக்கள் பேரணியுடன் இடம்பெறவுள்ளதாக தெரிவித்த அவர் இராகலையில் இடம்பெறும் மேதின நிகழ்வில் மேதின கோரிக்கைகளும் முன் வைக்க உள்ளதாக தெரிவித்தார்.

அதேபோல இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் மேதின நிகழ்வுகள் ஹட்டன் டி.கே.டப்ளியு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக சங்கத்தின் செயலாளர் தெரிவித்தார்.

# இடறி விழுந்து குடும்பஸ்தர் மரணம்

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் திடீரென இடறி விழுந்து மரணமான சம்பவம் ஒன்று பலாங்கொடையில் இடம்பெற்றுள்ளது. பலாங்கொடை நகரின் பான்ஸ்ரத்வத்த வீதியில் இச்சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

மரணமடைந்தவர் மஸ்ஸென்ன பெட்டிகல பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதான கணேஷன் விஜேகுமார் என்ற குடும்பஸ்தர் என விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் பலாங்கொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மின் கட்டணம் செலுத்தாதோருக்கு சலுகைகள் வழங்குமாறு கோரிக்கை

(மஸ்கெலியா செய்தியாளர்)

மலையக பெருந்தோட்டப் பகுதிகளில் மின் கட்டணம் செலுத்தாதவர்களுக்கு வாய்ப்பு வழங்க வேண்டும் - என மஸ்கெலியா பிரதேச சபையின் புரவுன்லோ வட்டார முன்னாள் உறுப்பினர் ராஜ் அசோக் தெரிவித்துள்ளார்.

மின் பட்டியலை உரிய நேரத்தில் குறிப்பிட்ட திகதியில் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேசமயத்தில் பெருந்தோட்டப் பகுதிகளில் மின் கட்டணம் செலுத்தாதவர்களுக்கு வாய்ப்பு வழங்கவேண்டும். காரணம், வருமானத்தில் குறைந்து நிற்கும் சமூகமாக இருப்பதால் இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மின் கட்டண அதிகரிப்பினால் பெரும்பாலும் மலையக மக்கள் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

குறிப்பிட்ட திகதிக்கு மின் பட்டியல் வழங்க முடியாமல் போனால் மின் அலகுகள் அதிகரிக்க வாய்ப்புள்ளது. அதற்காக வரியும் வசூலிக்கப்படுகின்றது.

உதாரணமாக 90 அலகுகளுக்கு மேல் செல்லும் போது கட்டணம் இரட்டிப்பாக அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதனை கவனத்திற்கொண்டு பெருந்தோட்ட மக்களுக்கு மட்டுமல்லாமல் நாட்டிலுள்ள அனைத்து மக்களும் பயன்பெறும் வகையில் மின் கட்டணம் குறைக்க வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# பாவனைக்கு உதவாத நிலையில் ஹட்டன் பஸ் நிலையக் கழிப்பறை

## ஒருவரிடம் 40 ரூபா அறவிடப்படுவதாகவும் குற்றச்சாட்டு

(மஸ்கெலியா செய்தியாளர்)



ஹட்டன் நகரிலுள்ள பிரதான பஸ்கள் தரிப்பிடத்தில் மக்கள் பாவனைக்கு உதவாத நிலையில் உள்ள கழிவறையை உபயோகிக்க 40 ரூபா பணம் அறவிடுவதாக பயணிகள், பாடசாலை மாணவர்கள், பஸ் நடத்துனர் உட்பட சாரதிகள் புகார் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, இந்தக் கழிவறை மிகவும் மோசமடைந்துள்ள நிலையில், எப்போதும் துர்மணம் வீசுவதாகவும், கழிவறைப் பகுதியிலுள்ள கழிவுநீர் குழியில் வெடிப்புகள் ஏற்பட்டு தாழிறங்கி உள்ளதால் கழிவுநீர் வெளியே செல்லும் அபாயம் தோன்றியுள்ளது.

இது குறித்து ஹட்டன் நகர சபை செயலாளர் டி.வி.பி.பண்டாரவிடம் பஸ் நிலைய அதிகாரி, சாரதிகள், நடத்துநர்கள், பயணிகள், பாடசாலை மாணவர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.


இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனம் செலுத்தி முறையான கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கட்டண விபரங்களை மூன்று மொழிகளில் காட்சிப்படுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



பதுளை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிரதேச செயலகத்தில் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் நேற்று (20) இடம்பெற்றது. (படப்பிடிப்பு: பதுளை செய்தியாளர்)

# ஆபத்தான திருவையாறு சரவணாஸ் பாலத்தை முழுமையாக அகற்ற தீர்மானம்

(மு.தமிழ்ச்செல்வன்)



கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்டதிருவையாறு பகுதியில் ஆபத்தான நிலையில் காணப்படும் சரவணாஸ் பாலத்தினை முழுமையாக அகற்றுவதற்கு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதென மாவட்ட செயலக ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இப்பாலத்தின் ஆபத்தான நிலைமை கடந்த இரண்டு வாரங்களுக்கு முன் ஊடகங்களில் வெளிக்கொண்டுவரப்பட்டிருந்தது. இந்நிலையில், குறித்த விடயம் தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் (19) மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரனின் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் துறைசார் அதிகாரிகளுடன் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் சரவணாஸ் பாலத்தின் அனர்த்த நிலைமை தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இரணைமடு நீர்ப்பாசன பிரதான கால்வாயின் மேலாக கட்டப்பட்டிருக்கும் சுமார் 40 வருட பழமையான சரவணாஸ் பாலம் தற்போது சேதமடைந்து இடிந்துவிழும் தறுவாயில் காணப்படுவதால், குறித்த பாலத்தின் ஊடாக பொதுமக்கள் பயணம் செய்யமுடியாத ஆபத்தான நிலை காணப்படுவதுடன், சீரான நீர்ப்பாசன வழங்கலையும் மேற்கொள்ள முடியாத சூழல் உருவாகியுள்ளது.

இவ்வாறான இடிபாடுகளுடன் காணப்படும் பாலத்தினால் ஏற்படப்போகும் பாரிய ஆபத்துகளைத் தவிர்ப்பதற்காக கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளின் கோரிக்கைக்கமைவாக பாலத்தை முழுமையாக அகற்றுவதாக முடிவு எட்டப்பட்டுள்ளது. பாலத்தை அகற்றுவதற்கான முழு பொறுப்பை நீர்ப்பாசனத் திணைக்களம் ஏற்றுக்கொண்டது.

மேலும் புதிய பாலத்தை விரைவாக அமைப்பதற்கான திட்டமொன்றினை விரைவாக தயாரித்து, அதனை நடைமுறைப் படுத்தி விரைவில் புதிய பாலத்தை அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர், திட்டமிடல் பணிப்பாளர், கரைச்சி பிரதேச செயலாளர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர் - அனர்த்த முகாமைத்துவ பிரிவு, பொலிஸ் அதிகாரி, கரைச்சி பிரதேச சபை செயலாளர், நீர்ப்பாசன திணைக்களப் பொறியியலாளர், நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள், வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள், கமநல சேவை அதிகாரிகள், கமக்கார அமைப்பின் பிரதிநிதிகள், கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்துகொண்டனர்.

# கொடிகாமம் பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்து அதிகாரி விபத்தில் பலி!

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடி பிள்ளையார் ஆலயத்தை அண்மித்து 19/04 புதன்கிழமை இரவு 9.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் கடமை புரியும் போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து மோட்டார் சைக்கிளில் தனியாக வந்த பொலிஸ் அதிகாரி கைதடி பகுதியில் அரச பஸ்ஸுடன் பின்புறமாக மோதி வீதியில் தூக்கி வீசப்பட்ட நிலையில் எதிரே வந்த லொறி மோதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இதில் கொடிகாமம் பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரியான கொழும்பு வாரியப்பொல பகுதியைச் சேர்ந்த 54 வயதான குணதிலக்க என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# போராட்டத்திற்கு யாழ்ப்பாண வணிகர் கழகம் பூரண ஆதரவு

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அழைப்பின் பேரில் எதிர்வரும் 25ஆம் திகதி இடம்பெற உள்ள வடக்கு, கிழக்கு தழுவிய கடையடைப்புப் போராட்டத்திற்கு யாழ்ப்பாண வணிகர் கழகமும் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாண வணிகக் கழகத்திற்கும் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று வணிகர் கழகத்தில் இடம்பெற்றது. இதன்போது யாழ்ப்பாண வணிகர் கழகம் அனைத்து கடைகளையும் பூட்டி பூரண ஆதரவு வழங்குவதாக தெரிவித்தது.

சந்திப்பில் இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் பா.கஜதீபன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



# சிவாஜி கணேசன் குறித்த நூல் யாழ். பல்கலையில் அறிமுகம்

## ராம்குமார் சிவாஜி கணேசனும் கலந்துகொள்கிறார்




நடிகர் திலகம் சிவாஜி கணேசன் குறித்து தமிழகத்தைச் சோ்ந்த ஆய்வாளர் முனைவர் மருதுமோகன், சென்னை பல்கலைக்கழகத்தில் ஆய்வு செய்து எழுதிய “சிவாஜி கணேசன்” எனும் நூலின் அறிமுக விழா எதிர் வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக் கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவிருக்கின்றது.

நடிகர் திலகத்தின் மகன் ராம்குமார் கணேசன் இந்த நிகழ்வில் கலந்துகொள்வதற்காக வருகைதருகின்றார்.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் எஸ்.ரகுராம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தொடக்கவுரையை இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் நிகழ்த்துவார். அதனைத் தொடர்ந்து “நீங்கா நினைவில் சிவாஜி” என்ற தலைப்பில் பேராசிரியர் சி.சிவலிங்கராஜாவின் சிறப்புரை இடம்பெறும். நூலாசிரியர் அறிமுகத்தை சிவா பிள்ளை நிகழ்த்த, நூல் அறிமுக உரையை முனைவர் கா.வெ.செ.மருதுமோகன் நிகழ்த்துவார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா நூலை வெளியிட்டுவைக்க ராம்குமார் சிவாஜி கணேசன் பிரதிகளைக் கையளிப்பார்.

முனைவர் கோ.சகாதேவி, முத்தையாபிள்ளை சிறிகாந்த், தேவராயபிள்ளை லெட்சுமணன்ராஜ், டாக்டர் சதீஸ்குமார் சிவலிங்கம், முனைவர் மதிவாணன் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்குவார்கள்.

அதனைத் தொடர்ந்து சிறப்பு நிகழ்ச்சியாக இலங்கை, இந்திய பேச்சாளர்கள் பங்குகொள்ளும் பட்டிமன்றம் ஒன்றும் இடம்பெறும். செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலி லலீசன் இதற்குத் தலைமை தாங்குவார்

ஆர்வமுள்ள அனைவரும் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளலாம் என்று ஏற்பாட்டாளர்கள் பொதுமக்களை அழைத்துள்ளனர். பிரவேசம் இலவசமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# முறைப்பாட்டுக்கு நடவடிக்கை இல்லை; மாநகர சபை முன்னால் தனிநபர் போராட்டம்






யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு முன்னால் தனிநபர் ஒருவர் நேற்று முன்தினம் (19) காலை முதல் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உட்பட்ட பருத்தித்துறை வீதியில் வசிக்கும் குறித்த நபரின் வீட்டிற்கு அருகில் அனுமதி பெறப்படாத கட்டடம் ஒன்று உள்ளதாகவும் அந்தக் கட்டடத்தின் கழிவுநீர் தன்னுடைய வீட்டிற்குள் வருவதாகவும் இதனை மாநகர சபையிடம் பல்வேறு தடவைகள் முறையிட்டும் எதுவித நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் இதனாலேயே ஒருநாள் அடையாள உண்ணாவிரதத்தில் ஈடுபடுவதாகவும் தெரிவித்தார்.

குறித்த நபருடன் யாழ். மாநகர சபை அதிகாரிகள் கலந்தாலோசித்தபோதும் குறித்த நபர் தொடர்ச்சியாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்.

# மூன்றரை வருடங்களாக மூடிக்கிடக்கும் மஹிந்த உதய தொழில்நுட்பக் கட்டடம்

## எட்டியாந்தோட்டை புனித மரியாள் பாடசாலை நிர்வாகத்தின் அசமந்தப்போக்கு

EXCLUSIVE







(நமது விசேட நிருபர்)

எட்டியாந்தோட்டை புனித மரியாள் பாடசாலை யில் கடந்த 2012ஆம் ஆண்டு 65 கணினிகளுடன் புதிதாக அமைத்துக் கொடுக்கப்பட்ட தொழில்நுட்பக் கூடம் கடந்த மூன்றரை வருடங்களாக மூடப்பட்டு, பாவனைக்குதவாத நிலையில் காணப்படுவதாக பாடசாலையின் பழைய மாணவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 2012ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் மேற்கொள்ளப்பட்ட மஹிந்த உதய தொழில்நுட்ப ஆய்வுகூடங்கள் ஆயிரம் பாடசாலைகளுக்குக் கிடைக்கப்பெற்றன.

இந்தத் திட்டத்தின் மூலம் பல்வேறு பிரதேசங் களில் வாழும் மாணவர்கள் கணினி கல்வி நெறியைக் கற்க இலகுவாக இருந்துவந்தது. பெருந்தோட்டங்களைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளும் இதில் பயன்பெற்று வந்தனர்.

பலகோடி ரூபா நிதி ஒதுக்கீட்டில் குறித்த திட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன், ஆயிரம் பாடசாலைகளுக்குக் கொண்டுசெல்லப்பட்டது.

இந்நிலையில், கேகாலை மாவட்டம் தெஹியோவிட்ட வலயக்கல்விக்குட்பட்ட எட்டியாந்தோட்டை புனித மரியாள் பாடசாலையும் குறித்த திட்டத்துக்காக தெரிவுசெய்யப்பட்டது.

குறித்த பாடசாலையில் 65இற்கும் மேற்பட்ட விலை உயர்ந்த கணினிகளுடன் தொழில்நுட்ப ஆய்வுகூடம் ஒன்று அமைக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த மூன்றரை வருடங்களாக குறித்த தொழில்நுட்பகங்கூடம் மூடப்பட்டு, காடாகிக் கிடக்கின்றது.

பெருந்தோட்ட மாணவர்களே குறித்த தொழில்நுட்ப ஆய்வுகூடத்தைப் பயன்படுத்திய நிலையில், இவ்வாறு மூடப்பட்டிருப்பதால் அவர்களின் கல்வி நடவடிக்கையும் பாதிக்கப் பட்டுள்ளது.

மூன்றரை வருடங்களாக இந்த தொழில்நுட்ப ஆய்வுகூடம் மூடப் பட்டிருக்கும் நிலையில், அதற்கான காரணம் என்ன, ஏன் இது மூடப்பட்டுள்ளது, இந்த தொழில்நுட்ப ஆய்வு கூடத்துக்கு வழங்கப்பட்டிருந்த 65 கணினிகளின் தற்போதைய நிலை என்ன, கணினிகள் பழுதடைந் துள்ளனவா அல்லது இருக்கின்றதா, இல்லையா என்பது தொடர்பில் தகவல் எதுவும் இல்லை என பாடசாலையின் பழைய மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து பலமுறை தெஹியோவிட்ட வலயக்கல்விப் பணிமனைக்கும் சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களத்திற்கும் கடிதம் மூலமாகவும் நேரடியாகவும் முறைப்பாடுகள் தெரிவித்தபோதிலும் இதுவரையும் எந்த பலனும் கிடைக்கவில்லை என பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் தெரிவித்தார்.

# வல்லிபுரம் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டவர் கைது!





வடமராட்சி வல்லிபுரத்தை அண்டிய பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட இரண்டு வாகனங்களை விசேட அதிரடிப்படை கைப்பற்றியதுடன், சந்தேக நபர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்ட ஒரு ரிப்பர் வாகனத்தையும், ஒரு படிரக வாகனத்தையும் சுற்றிவளைத்து குடத்தனை விசேட அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளதுடன், சந்தேக நபர் ஒருவரையும் கைதுசெய்துள்ளனர்.

அண்மைக்காலமாக வல்லிபுரம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கைகள் அதிகரித்துவரும் நிலையில், விசேட அதிரடிப் படையினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.





மிஷன் டி விஷன் நிர்வாகக் குழுவினரால் ஏற்பாடுசெய்யப்பட்ட இப்தார் நிகழ்வு நேற்று முன்தினம் (19) இலக்கம் 38, புதுச்செட்டித் தெரு "மிஹீறி ரெஸ்டாரண்டில்" நடைபெற்றது. இதில் மூவின புகைப்படக் கலைஞர்களும் கலந்துகொண்டனர்.

# வென்னப்புவ பஸ் விபத்தில் 10 பேர் காயம்





(உடப்பு செய்தியாளர்)

கொழும்பு - சிலாபம் வீதியில் வென்னப்புவ நைனாமடம் கிங்கோயா பாலத்துக்கு அருகில் நேற்று (20) அதிகாலை 3.45 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் 10 பேர் காயமடைந்துள்ளனர்.

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று புல்மோட்டையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த போதே விபத்துக்குள்ளானது.

குறித்த பஸ் பாலத்தின் பக்கவாட்டு வேலியில் மோதியதில் விபத்து ஏற்பட்டது, இதனையடுத்து சீமெந்து கலவை ஏற்றிச்சென்ற லொறியும் குறித்த பஸ் மீது பின்புறத்தில் மோதியுள்ளது.

சம்பவம் தொடர்பில் வென்னப்புவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.









பேருவளை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டிலான இப்தார் நிகழ்வு நேற்று (19ஆம் திகதி) தர்கா நகர் அலிப் தேசிய பாடசாலையில் தலைவர் எம்.எஸ்.எம்.ரிஸ்வான் ஹாஜியார் தலைமையில் நடைபெற்றது. சங்க உப தலைவர் ஏ.ஆர்.எம்.பதியுத்தீன், செயளாலர் மொஹம்மட் சினான், பொருளாளர் ஏ.ஜே.எம்.அக்பர் உட்பட உறுப்பினர்கள், பேருவளை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் கீழுள்ள விளையாட்டுக் கழகங்களின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

(பேருவளை பீ.எம்.முக்தார்)

# மஹிந்தவின் இல்லத்தில் இப்தார் நிகழ்வு







முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கொழும்பிலுள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் புனித ரமழான் நோன்பை முன்னிட்டு இப்தார் நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் முக்கிய இஸ்லாமிய மதத் தலைவர்கள் மற்றும் மேலும் பலர் கலந்துகொண்டு தேசிய நல்லிணக்கத்தை வலுப்படுத்த முன்னாள் ஜனாதிபதியின் முயற்சிகளைப் பாராட்டினர்.

இந்நிகழ்வில் அமைச்சர்களான எம்.யூ.எம்.அலி சப்ரி, டிரான் அலஸ், விதுர விக்கிரமநாயக்க, நசீர் அஹமட், பாராளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், ஏ.எச்.எம்.பௌசி, மரிஜான் பலீல், எஸ்.எம்.எம்.முஷாரப், உயர்ஸ்தானிகர்கள் மற்றும் பெருந்திரளான இஸ்லாமியர்கள் கலந்துகொண்டனர்.

நாட்டில் தேசிய நல்லிணக்கத்திற்கான பிரார்த்தனைகளுடன் இப்தார் நிகழ்வு ஆரம்பமாகியிருந்தது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி, இந்தச் சிறப்புமிக்க நிகழ்வைக் கொண்டாடுவதற்கு நீங்கள் அனைவரும் இங்கு வந்துள்ளதையிட்டு நான் பெருமையடைகிறேன். நாம் ஒரே சமூகமாக ஒன்றிணைந்து, எமது ஆசீர்வாதங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும், சமாதானத்திற்காக பிரார்த்தனை செய்வதற்கும் இது ஒரு சிறந்த தருணம் - எனத் தெரிவித்தார்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (20.04.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 208.5904 | 221.5571 |
| கனேடியன் டொலர் | 230.7959 | 245.1273 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 44.6213 | 48.2168 |
| யூரோ | 342.1609 | 361.1187 |
| ஜப்பான் யென் | 2.3169 | 2.4445 |
| சிங்கப்பூர் டொலர் | 233.5965 | 247.2835 |
| ஸ்ரேலிங் பவுன் | 388.2389 | 409.1618 |
| சுவிஸ் பிரான்ங் | 346.2099 | 368.4303 |
| ஐ.அ. டொலர் | 313.1292 | 327.8921 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 850.6478 |
| குவைட் | குவைட் தினார் | 1,046.1071 |
| ஓமான் | ஓமான் றியால் | 832.9840 |
| கட்டார் | கட்டார் றியால் | 87.9154 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85.5173 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87.3313 |







சித்திரை விசு திருவிழாவை முன்னிட்டு அகில இலங்கை ஸ்ரீ சாந்தஸ்வரூபன் யாத்திரைக் குழுவின் மாபெரும் சக்தி பூஜையும் பஜனை மற்றும் அன்னதானமும் முகத்துவாரம் ஸ்ரீவெங்கடேஷ்வர மஹா விஷ்ணு ஆலயத்தில், குழுவின் தலைவர் குரு சாமி ஜெயமுருகன் வீரமூர்த்தி தலைமையில் கடந்த சனிக்கிழமை மாலை நடைபெற்றது.

# ஈதுல் பித்ர் ரமழான் வாழ்த்துச் செய்தி

## ரமழான் தந்த படிப்பினைகளை உணர்ந்து செயற்படுவோம்

### சம்மாந்துறை பிரதேச சபை முன்னாள் தவிசாளர் மாஹிர்



(எருவில் செய்தியாளர்)

“ஈகையின் சிறப்பை எடுத்தியம்பும் புனித ரமழான் மாதம் எம்மை விட்டுப்பிரிந்து செல்லும் நிலையில், ஈதுல் பித்ர் ரமழான் பெருநாளைக் கொண்டாடும் சகல முஸ்லிம்களுக்கும் பெருநாள் வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் பேருவகையடைகின்றேன்” - இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உயர் பீட உறுப்பினரும் அக்கட்சியின் சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளரும், சம்மாந்துறை பிரதேச சபை முன்னாள் தவிசாளருமான ஐ.எல்.எம்.மாஹிர் விடுத்துள்ள நோன்புப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.


இந்த வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவிக்கையில், ரமழான் மாதம் முழுவதும் பசித்திருந்தும் விழித்திருந்தும் நல்லமல்கள் பல புரிந்து நோன்புப் பெருநாளைக் கொண்டாடும் மகிழ்ச்சிகரமான இந்த நன்நாளில், புனித ரமழான் நமக்கு உணர்த்திய, கற்றுத்தந்த பாடங்களை என்றும் நினைவில் கொண்டவர்களாக எமது எதிர்கால செயற்பாடுகள் அமைய வேண்டும்.

மனித நேயம், இன நல்லிணக்கம் போன்ற பல்வேறு நற்பண்புகளை ரமழான் மாதம் நமக்கு உணர்த்தியுள்ளதை நாம் படிப்பினையாகக் கொள்ள வேண்டும். நாடும், மக்களும் இன்று பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி சிறிதேனும் மீண்டு வரும் நிலையில், இந்த அவலம் தொடராது நாடும், மக்களும் மீட்சி பெற இந்த நன்னாளில் இறைவனைப் பிரார்த்திப்போம்.

இஸ்லாம் எப்போதும் மனிதனால் முடியாத ஒன்றைச் செய்யும்படி சொல்வதே இல்லை, சொன்னதுமில்லை. நாம் நற்செயல்கள் செய்வது பெரியதல்ல, அதை நாள் தவறாது தொடர்ந்து செய்வது தான் சிறப்பானதாகும். அல்லாஹ்வின் உவப்புக்குரிய வழிகளில் பெருநாளைக் கொண்டாடுவோம் - எனத் தெரிவித்துள்ளார்.

## சுபீட்சமும் மகிழ்ச்சியும் பெருகட்டும்

### முஸ்லிம் காங்கிரஸின் பதில் பொருளாளர் யஹியாகான்



''சுபீட்சமும் மகிழ்ச்சியும் பெருக இப் புனித நோன்புப் பெருநாள் தினத்தில் வாழ்த்துகிறேன்'' என முஸ்லிம் காங்கிரஸின் பதில் பொருளாளர் ஏ.சி.யஹியாகான் தெரிவித்துள்ளார்.

புனித நோன்பு பெருநாளை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நோன்பு பெருநாளை கொண்டாடும் உலக வாழ் முஸ்லிம்கள் அனைவருக்கும் எனது பெருநாள் வாழ்த்துகள் உரித்தாகட்டும். ஒருமாத காலம் நோன்பு இருந்து வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டு பெருநாளை கொண்டாடுகின்றோம்.

நாம் இன்று எதிர்நோக்கி இருக்கும் பொருளாதார நெருக்கடிமிக்க சூழ்நிலையில் பல குடும்பங்கள் இந்த பெருநாளை கொண்டாட பலத்த சவால்களை எதிர்நோக்கி இருப்பர் என்பதையும் நாம் மனதில் கொள்ள வேண்டும். அவ்வாறான குடும்பங்களுக்கு எம்மால் முடிந்த உதவிகளை செய்து எம்மைப்போன்று அவர்களும் இப்புனித நாளை கொண்டாட வழியமைத்துக் கொடுப்போம்.

ஒருமாத காலத்தில் நாம் பெற்ற பயிற்சியை, அனுபவங்களை, வணக்க வழிபாடுகளை அடுத்துவரும் மாதங்களிலும் கடைப்பிடிப்போம். அனைவருக்கும் சுபீட்சமான மகிழ்ச்சியான காலம் பிறக்க இப்புனித நோன்பு பெருநாள் தினத்தில் பிரார்த்திக்கிறேன்- எனத் தெரிவித்துள்ளார்.

## சமாதானமான வாழ்க்கையே முஸ்லிம்களின் நோக்கம்

### சுகாதார வைத்திய அதிகாரி அர்சத் காரியப்பர்



''சமாதானம் மற்றும் புரிந்துணர்வு என்பவற்றிலுள்ள முஸ்லிம்களின் விருப்பத்தை, ஏனைய சமூகத்தினர் புரிந்து கொள்ளும் சுமுக நிலை மேலும் தொடர்ந்து செல்ல பிரார்த்திக்கிறேன்'' என சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஜே.கே.எம். அர்சத் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

புனித நோன்பு பெருநாளை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எமது நாடு இன்று எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் புனித நோன்பு பெருநாளை கொண்டாடுகின்றோம். ரமழான் நோன்பு கால பயிற்சியில் பெற்றுக் கொண்ட பொறுமையை முஸ்லிம்களாகிய நாம் தொடர்ந்தும் கடைப்பிடிப்பதே எமது இலக்காக இருக்க வேண்டும்.

புனித ரமழானில் முஸ்லிம்கள் கையேந்திக் கேட்ட அனைத்துப் பிரார்த்தனைகளையும் அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக. சுகாதாரத்துறையை சேர்ந்தவர் என்ற ரீதியில் கடந்த கால நோன்பு மற்றும் பெருநாள் காலங்களை நினைத்து பார்த்தவனாக இனிவரும் காலங்களிலும் முஸ்லிம் சமூகம் மட்டுமன்றி ஏனைய அனைத்து சமூகங்களும் சுகாதார விடயங்களில் ஒன்றுபட வேண்டிய அவசியத்தை எத்திவைக்க விரும்புகிறேன். அனைவருக்கும் இனிய ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் வாழ்த்துகள் - எனத் தெரிவித்துள்ளார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## புதிய வைத்திய அத்தியட்சகராக றஜாப் நியமனம்



(அட்டாளைச்சேனை மத்திய செய்தியாளர்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு புதிய வைத்திய அத்தியட்சகராக டொக்டர் ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர்.றஜாப் வியாழக்கிழமை(20) உத்தியோகபூர்வமாக தமது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார். பதில் வைத்திய அத்தியட்சகராக டொக்டர். எம்.எச்.எம். சனூபர் கடந்த 03 மாதங்களாக கடமையாற்றிய நிலையிலேயே சுகாதார அமைச்சினால் இந் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் வைத்திய நிபுணர்கள், வைத்திய அதிகாரிகள், தாதிய பரிபாலகர்கள், கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர், அலுவலக உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இவர் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளராகவும் பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராகவும் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.



**பாலமுனை ரைற்றான் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்தார் நிகழ்வும் கௌரவிப்பும் கழகத்தின் தலைவர் எம்.ஐ.அர்சாத் தலைமையில் புதன்கிழமை(19) பாலமுனை பீச் பாக்கில் இடம்பெற்றது. (பாலமுனை செய்தியாளர்)**



**ஒலுவில் எரிபொருள் நிரப்பு நிலையம் உத்தியோகபூர்வமாக திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினர் அல்ஹாஜ் ஏ.எல்.எம். அதாவுல்லாஹ்வினால் புதன்கிழமை(19) திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் அதன் உரிமையாளர் பொறியியலாளர் ஐ.எல்.ஹைதர் அலி, மட்டக்களப்பு பிராந்திய இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன முகாமையாளர் கே.கே.டி.எஸ். தேவப்பிரிய, முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை, அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அகமது ஷாபிர், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனிபா உட்பட ஏனைய பிரமுகர்கள் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டிருந்தனர். (திராய்க்கேணி செய்தியாளர்)**

## சாய்ந்தமருது ஜும்ஆப் பள்ளியில் இடம்பெற்ற இப்தார் நிகழ்வு



(பொலிவேரியன் செய்தியாளர்)

சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் மரைக்காயர் சபையினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இப்தார் நிகழ்வு புதன்கிழமை(19) சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் மேல் மாடியில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் பொறுப்பாளர் சபைத் தலைவர் ஏ.ஹிபத்துல் கரீம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் வீ. ஜெகதீஸன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இதன்போது நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்த அதிதிகள் உட்பட 27ஆம் நாளில் ஸஹர் மற்றும் இப்தார் நிகழ்வுகளை ஒழுங்கு செய்த சொப்டா நிறுவன பிரதம நிறைவேற்று பணிப்பாளர் எம்.எம்.நஸீர், முன்னாள் மாநகர சபை உறுப்பினரும் றியோ மார்க்கட்டிங் பணிப்பாளருமான என்.எம்.றிஸ்மீர் மற்றும் ரெட்சிலி உரிமையாளர் எம்.எம்.ஏ.ரஹீம், பிஸ்மில்லாஹ் பேக்கரி உரிமையாளர் ஏ.எம்.எம். தஸ்லீம், அஸ்கி எம்போரியம் முஹம்மட் சமீம், இமாட் பாமசி உரிமையாளரும் மட்டக்களப்பு ஏயார்டெல் முகாமையாளருமான ஏ.எம்.சபாத்துல்லாஹ் மற்றும் ஊடகவியலாளர்கள், நிகழ்வை நடத்துவதற்கு முழுமுயற்சி செய்த நோன்புக்குழு உறுப்பினர்கள் மற்றும் பள்ளி பராமரிப்புக்குழு மேலும் ஒழுங்குகளை செய்த சாய்ந்தமருது-மாளிகைக்காடு ஜும்ஆப் பள்ளிவாசல் ஊழியர்கள், தொண்டர்கள் மற்றும் ஏனையோருக்கும் செயலாளர் ஐ.எல்.எம்.மன்சூர் நன்றி தெரிவித்தார்.



**கிழக்கு மாகாண உள்ளக கணக்காய்வு திணைக்களத்தின் கல்முனை அலுவலகம் ஏற்பாடு செய்த இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வு புதன்கிழமை(19) கல்முனை அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போது கௌரவ அதிதியாக கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ்.சஹூதுல் நஜீம் கலந்து கொண்டிருந்தார். இப்தார் விசேட மார்க்க சொற்பொழிவினை மௌலவி அஷ்-ஷெய்க் என்.ஜி.அப்துல் கமால் (இஸ்லாஹி) நிகழ்த்தினார். (பெரியநீலாவணை செய்தியாளர்)**



**ஆரையம்பதி விளையாட்டுக் கழகத்தின் புதுவருட சித்திரை விளையாட்டு நிகழ்வு உப தலைவர் சண்முகராசா பிரதீப் தலைமையில் ஆரையம்பதி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. பிரதம அதிதியாக மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி நமசிவாயம் சத்தியானந்தி கலந்து கொண்ட இந்நிகழ்வின்போது மரதன் ஓட்டம், பெண்களுக்கான சமநிலை ஓட்டம் உள்ளிட்ட ஆண்களுக்கான சமநிலை ஓட்டம், யானைக்கு கண் வைத்தல், தலையணை சமர் போன்ற பாரம்பரிய விளையாட்டுகளும் இடம்பெற்றன. (வெல்லாவெளி செய்தியாளர்)**



**இனங்களுக்கிடையில் நல்லுறவை கட்டியெழுப்பி இளம் சந்ததியை ஆற்றலும், நல்லொழுக்கமுமிக்க சந்ததியாக உருவாக்கும் நோக்கில் முஸ்லிம் இனங்களுக்கிடையிலான சமாதான வழிகாட்டல் குழுவின் ஏற்பாட்டில் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் நிகழ்ச்சி திட்ட உத்தியோகத்தர் யூ.எல்.ஹபீலாவின் ஒருங்கமைப்பில் அமைப்பின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் எப்.எம்.எஸ்.அன்ஸார் மௌலானா தலைமையில் சர்வதேச மகளிர் தின நிகழ்வும் இப்தார் வைபவமும் மருதமுனை பெண்கள் நிலையத்தில் இடம்பெற்றது. (மாளிகைக்காடு செய்தியாளர்)**

## ‘ஆசானுக்காக கையேந்துவோம்’ நினைவுப்பேருரை நிகழ்வு



(மாளிகைக்காடு செய்தியாளர்)

அண்மையில் காலமான சாய்ந்தமருது - மாளிகைக்காடு உலமா சபையின் பிரதித்தலைவரும் பிரதியதிபருமான சாய்ந்தமருது தஃவா இஸ்லாமிய கலாபீட பிரதானி, மூத்த உலமா மௌலவி மர்ஹூம் யூ.எல்.எம்.காஸிமின் நினைவுப்பேருரையும், துஆப் பிரார்த்தனை நிகழ்வும் புதன்கிழமை(19) நடைபெற்றது.

கமு / கமு / அல் - ஹுசைன் வித்தியாலய பழைய மாணவர் சங்க செயலாளர் யூ.எல்.என். ஹுதா உமரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மாளிகைக்காடு அந்நூர் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் பேஸ் இமாம் மௌலவி ஏ.எல்.எம். மின்ஹாஜ் துஆப் பிரார்த்தனையை நிகழ்த்தினார். நினைவுரையை அல்- ஹுசைன் வித்தியாலய ஸ்தாபக அதிபர் ஏ.எம். இப்ராஹிம் மற்றும் பழைய மாணவர் சங்க செயலாளர் ஆகியோர் நிகழ்த்தினர்.



**மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பின் ஜனாஸா வாகனத்துக்கான முக்கிய தேவையாக இருந்துவந்த கட்டில் மற்றும் உபகரணங்கள் என்பன அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. இதனை உத்தியோக பூர்வமாக கையளிக்கும் நிகழ்வில் சொப்டா நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பொறியியலாளர் எம்.எம்.நஸீர் கலந்து கொண்டு மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பின் நிர்வாகிகளிடம் அவற்றை வழங்கி வைப்பதை படத்தில் காணலாம். (அ.அஸ்வர்)**



**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அட்டாளைச்சேனை மத்திய குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்தார் நிகழ்வு அட்டாளைச்சேனை லொய்ட்ஸ் விடுதி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. கட்சி அமைப்பாளர் ஐ.எல்.எம்.மிஜ்வாத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் விசேட இப்தார் சொற்பொழிவை அக்கரைப்பற்று பட்டின ஜும்ஆப் பள்ளிவாசல் பேஷ் இமாம் மௌலவி ஏ.எல்.முஹம்மத் ஐயூப் நடத்தி வைத்தார். (கோணாவத்தை செய்தியாளர்)**

## உதவிக் கல்விப் பணிப்பாளராக சித்தீக் நியமனம்



(மீராவோடை செய்தியாளர்)

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளராக ஓட்டமாவடியைச் சேர்ந்த எம்.பீ.எம். சித்தீக் நியமிக்கப்பட்டுள்ளார்.

பல வருடங்களாக மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தில் தொழில் வழிகாட்டல் இணைப்பாளராக கடமை புரிந்து வந்த இவர், தற்போது முறைசாரா கல்விக்கான உதவிக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு உதவிக் கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்றுள்ள இவருக்கு கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.

# பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மட்டக்களப்பில் போராட்டம் முன்னெடுப்பு



(மட்டக்களப்பு செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் மேற்கு (பட்டிப்பளை) பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டம் நேற்று வியாழக்கிழமை (20) நடை பெற்றது. குறித்த அபிவிருத்திக் குழுக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்னர் பிரதேச செயலக வாயிற் கதவின் முன்னால் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று தமிழரசுக் கட்சியினரால் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவாங்கரைக்கும் எழுவாங்கரைக்குமான பிரதான போக்குவரத்து மார்க்கமாகவுள்ள அம்பிளாந்துறை – குருக்கள் மடம் படகுப்பாதை மற்றும் குருமண்வெளி – மண்டூர் படகுப்பாதையில் பயணம் செய்யும் பிரயாணிகளிடம் கட்டணம் அறவீடு செய்வதை உடன் நிறுத்த வேண்டும், மிக நீண்ட காலமாக பழுதடைந்துள்ள அம்பிளாந்துறை – பட்டிப்பளை பிரதான வீதியை புனரமைப்புச் செய்து தரவேண்டும், அப்பகுதியில் இருந்து மண் அகழப்படுவதைத் தடுத்தல் வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தே இவ்போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மண்முனை தென்மேற்கு (பட்டிப்பளை) பிரதேச கிளை ஏற்பாடு செய்திருந்த இக்கவனயீர்ப்புப் போராட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் மா.நடராசா மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடும் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

''இலங்கை அரசே வரியை அறவிட்டு ஏழை வயிற்றில் அடியாதே, பாழடைந்த வீதியை உடனே திருத்து, அரசே மக்கள் மீது வரிச் சுமையை அதிகரிக்காதே, எமது மண் வளத்தை விற்று வயிறு வளர்க்காதே, படகுப் பாதையில் கட்டணம் அறவீடு செய்வதை உடன் நிறுத்து'' உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தி கோஷங்களை எழுப்பினர்.

இதேவேளை, அவ்விடத்துக்கு வருகைதந்த இராஜாங்க அமைச்சர் ச.வியாழேந்திரன் கவனயீர்ப்பில் ஈடுபட்டவர்களுடன் உரையாடினார். பாதை போக்குவரத்தில் பயணிக்கும் பிரயாணிகளிடமிருந்து கட்டணம் அறவீடு செய்வதை தடுக்குமாறு அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் முடிவெடுத்து அதனை கிழக்கு மாகாண ஆளுநருக்கு அனுப்பி வைத்தல் மற்றும் அப்பகுதி மண் அகழ்வதை தடுப்பதற்குரிய நடவடிக்கையை தான் மேற்கொள்வதாகவும் அம்பிளாந்துறை – பட்டிப்பளை பிரதான வீதி புனரமைப்புச் செய்வதற்கு 8.5 கிலோ மீற்றர் வீதியை உலக வங்கி அபிவிருத்தித் திட்டத்துக்கு சமர்ப்பித்துள்ளதாகவும் இதன்போது அவர் தெரிவித்தார். பின்னர் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கலைந்துச் சென்றனர்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# 'பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டாம்' மூன்று மாவட்டங்களில் கவனயீர்ப்புப் போராட்டம்










(அப்துல்சலாம் யாசீம், பாறுக் ஷிஹான், பாண்டிருப்பு, வெல்லாவெளி செய்தியாளர்கள்)

மக்களின் உரிமைகளுக்கு மதிப்பளித்து பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டாம் என வலியுறுத்தி கிழக்கில் பல்வேறு இடங்களிலும் வியாழக்கிழமை (20) கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ''பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அமுல்படுத்தாதே, மனித உரிமைகளுக்கு மதிப்பளியுங்கள், சிறுபான்மையினரை அடக்குவதற்காக புதிய சட்டங்களை உருவாக்காதே'' உள்ளிட்ட பல கோஷங்களை எழுப்பி கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அந்தவகையில், திருகோணமலையில் நகர சபைக்கு முன்னால் வடக்கு, கிழக்கு பெண்கள் கூட்டு அமைப்பு கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்த அதேவேளை, அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 4ஆம் கிராமத்தில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து பெண்கள் அமைப்புகளினாலும் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மேலும், வடகிழக்கு பெண்கள் கூட்டு மையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கவனயீர்ப்புப் போராட்டம் மட்டக்களப்பு மனித உரிமை ஆணைக்குழு பிராந்திய அலுவலகத்துக்கு முன்னால் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது சமூக செயற்பாட்டாளர்கள், பெண்கள், பொதுமக்கள், புத்திஜீவிகள், சமூக நிறுவனங்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொண்டு அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்துக்கு எதிராக தமது எதிர்ப்பை தெரிவித்தார்கள்.

# அரசாங்கத்துக்கு பணம் சேர்த்துக்கொடுக்கும் செயற்பாட்டில் அரசியல்வாதிகள் ஈடுபடக்கூடாது

## சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு



(மட்டக்களப்பு செய்தியாளர்)

அரசாங்கத்துக்குப் பணம் சேர்த்துக் கொடுக்கும் செயற்பாடுகளில் மக்கள் பிரதிநிதிகளான அரசியல்வாதிகள் ஈடுபடக் கூடாதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் குறிப்பிட்டுள்ளார்.

மண்முனை பற்று தென்எருவில் பற்று பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் புதன்கிழமை (19) இடம்பெற்றது. இதன்போது கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மக்களுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் அவர்களுக்கு நன்மைகளைப் பெற்றுத் தருவதற்கே செயற்படுத்தப்பட வேண்டும். மாறாக அவர்களுக்கு அந்தத் திட்டங்கள் பாதகமாக அமையக் கூடாது என்பதுடன் அரசியல்வாதிகள் அதற்குத் துணைபோகக் கூடாது.

அதேவேளை, அரசியல்வாதிகள் தமது அரசியல் இலாபம் கருதியும் குறித்த திட்டங்களை நடைமுறைப்படுத்தக்கூடாது. இதற்குப் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் நான் எனது எதிர்ப்புகளைத் தொடர்ந்தும் வெளியிடுவேன்.

உதாரணமாக, தென்எருவில் பற்று பிரதேசத்தில் இதுவரை காலமும் முன்னெடுக்கப்பட்டு வந்த படகுப்பாதைக்கு பணம் அறவிடப்படவில்லை. ஆனால் தற்போது திடீரென மக்களிடம் 50 ரூபா பணம் அறவிடப்படுகின்றது. நாம் பணம் அறவிட வேண்டாம் எனக் கூறவில்லை. தற்போது காணப்படுகின்ற நெருக்கடி நிலைமையின் மத்தியில் மக்களிடம் பணம் அறவிடப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. ஆனால் புதிய படகுப் பாதையை அமைத்த பின்னர் பணம் அறவிடுவதில் எந்தப் பிரச்சினையும் எமக்கு இல்லை.

தற்போதுள்ள அந்தப் படகுப் பாதையில் பல சிக்கல்கள் காணப்படுகின்றன. அதில் பல வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். குறிப்பாக, இந்த விடயத்தில் பாடசாலை மாணவர்களே அதிகம் பாதிக்கப் படுவார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். அதிகமாக பாடசாலை மாணவர்கள், தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்வோர், ஆசிரியர்கள் உள்ளிட்ட தரப்பினர் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

பொறுப்புவாய்ந்த அமைச்சர் மற்றும் அபிவிருத்திக்குழுத் தலைவர் என்ற வகையில் இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் தலையிட்டு இந்த விடயத்தில் முடிவுகளை எடுக்க வேண்டும். ஆனால் இராஜாங்க அமைச்சர் இந்த விடயத்தில் எந்த முடிவுகளையும் எடுப்பதாகத் தெரியவில்லை.

எனவே உடனடியாக இந்த பணம் அறவிடும் செயற்பாடுகளை நிறுத்தி அதற்கான மாற்று ஏற்பாடுகளை எவ்வாறு முன்னெடுப்பது என்பது குறித்து திட்டமிடல்களை மேற்கொள்ள வேண்டும்.

இந்த விடயத்தில் அரசியல் அழுத்தங்களுக்கு அடிபணியாமல் பிரதேச செயலாளர் உரிய முடிவுகளை எடுக்க வேண்டும். அத்துடன் இந்தப் பணம் வசூலிக்கும் நடைமுறையினை முன்னெடுக்க முடியாதென்பதை உரிய தரப்பினருக்கும் எடுத்துக்கூற வேண்டும். தொடர்ந்தும் மக்களை நெருக்கடிக்குள் தள்ளக் கூடாது என்பதில் மக்கள் பிரதிநிதிகளான அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும் என்றார்

# இன, மத வேறுபாடுகளின்றி நாட்டின் அனைவரதும் பாதுகாப்பை உறுதிசெய்வது அரசின் பொறுப்பாகும்

## இம்ரான் மஹ்ரூப் எம்.பி.

(கந்தளாய், கிண்ணியா, சீனக்குடா செய்தியாளர்கள்)

இன, மத வேறுபாடின்றி நாட்டின் அனைத்து மக்களதும் பாதுகாப்பை உறுதிசெய்வதும் இதன் பின்னணியில் ஈஸ்டர் தாக்குதல் போன்ற சதிகள் இருந்தால் அவற்றை முறியடிப்பதும் அவ்வாறின்றி விஷமத்தனமான பொறுப்பற்ற நடவடிக்கைகள் காணப்பட்டால் கடுமையான நடவடிக்கைகளை அவற்றுக்கெதிராக எடுப்பதும் அரசாங்கத்தின் முன்னுள்ள முதன்மை பொறுப்புகளாகும் என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

மேலும், அக்குறணை சம்பவத்துக்கும் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்துக்கும் தொடர்புகள் உள்ளதா எனவும் அவர் கேள்வி எழுப்பினார். இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை வாழ் முஸ்லிம்கள் புனித ரமழான் மாதத்தின் 27ஆம் நாள் இரவில் புனித லைலத்துல் கத்ர் இரவை எதிர்பார்த்து தமது வணக்க வழிபாடுகளை முன்னெடுக்க முனைந்த நேரத்தில் அக்குறணை பகுதி பள்ளிவாசலுக்கு



வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதாக வந்த தகவல் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

பொலிஸாருக்கு வந்த அநாமதேய அழைப்பின் அடியாக இவ்வாறான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிகிறது. பொதுமக்கள் பாதுகாப்பை கருத்தில்கொண்டு உடனடியாக செயல்பட்ட பாதுகாப்பு தரப்புக்கு நாம் நன்றியை தெரிவிக்கின்றோம். அதே நேரம் ஒரே ஒரு அநாமதேய அழைப்பு அல்லது அநாமதேய கடிதம் எந்தவொரு சமூகத்தின் விசேட நிகழ்வுகளையும் சீர்குலைக்கும் நிலைமையை நாம் அனுமதிக்கவும் கூடாது. இதே நிலைமை, நாளை ஒரு பெரஹெர நிகழ்வுக்கோ அல்லது வேறு சமய நிகழ்வுக்கோ நடக்க நேர்ந்தால் அந்த நிகழ்வுகளை நிறுத்துவது ஒருபோதும் தீர்வாக மாட்டாது.

மேலும், வலி நிறைந்த ஈஸ்டர் தாக்குதல் நினைவை மீட்டும் நாட்களில் இப்படியான மன உளைச்சலுக்குரிய நிகழ்வுகள் நடப்பது பலத்த சந்தேகத்தை தருவதும் தவிர்க்க முடியாதது. ஈஸ்டர் தாக்குதலின் பின்னால் பாரிய அரசியல் பின்னணிகொண்ட சதி இருந்ததாக இன, மத வேறுபாடின்றி மிகப்பெரும்பாலானோர் நம்புகின்றனர்.

அக்குறணை சம்பவத்தின் பின்னணியில் அச்சப்படும் படியாக ஏதுமில்லை என்று அரச தரப்பு அமைச்சர்கள் கூறினாலும் கூட இந்த சலசலப்பும் அதிர்வலையும் உருவாக வேண்டுமென்ற நோக்கம் இதன்பின்னணியில் உள்ளதா என்ற கேள்வி எம்மிடம் எழுவது இயல்பானதே.

இதேவேளை, ஒரு சமூகத்தின் சந்தோஷத்தை சீர்குலைக்கும் விஷமத்தனம் இதன் பின்னால் உள்ளதா அல்லது ஜனநாயக விரோதமான கொடுங்கோன்மை சட்டமான ATA எனும் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் கொண்டுவரப்பட அரசு தயாராகும் நிலையில் அதற்கு தோதான சமூக நிலைமையை கட்டமைக்கும் கைங்கரியம் இதன் பின்னணியில் உள்ளதா என்ற சந்தேகம் பலமாக மக்கள் மத்தியில் எழுந்துள்ளதை மக்கள் பிரதிநிதி என்ற வகையில் என்னிடம் இன்று மட்டுமே மக்களிடமிருந்து வந்த கேள்விகளில் இருந்து புரிந்துகொள்ள முடிகிறது என்றார்.

# சட்டவிரோதமாக கடத்திச்செல்லப்பட்ட ஆறு மாடுகள் மீட்பு: இருவர் கைது

(கனகராசா சரவணன்)


மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை பிரதேசத்தில் இருந்து காத்தான்குடி பிரதேசத்துக்கு பிக்கப் ரக வாகனம் ஒன்றில் 6 மாடுகளை சட்டவிரோதமாக கடத்திச் சென்ற இருவரை மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினர் கைது செய்து புதன்கிழமை(19) ஒப்படைத்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில், பதில் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ரி.ரஜீவ்காந்தன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் கொக்கட்டிச்சோலை பிரதேசத்தில் இருந்து காத்தான்குடி பிரதேசத்தை நோக்கி பயணித்த பிக்கப் ரக வாகனத்தை பின் தொடர்ந்து அதனை காத்தான்குடி பகுதியில் வைத்து மடக்கிப்பிடித்து சோதனையிட்டபோது அதில் 6 மாடுகளை போலி அனுமதிப்பத்திரம் ஊடாக சட்டவிரோதமாக கடத்திச் செல்வதை கண்டறிந்ததையடுத்து, இருவரை கைது செய்ததுடன் 6 மாடுகளையும் கடத்தலுக்கு பயன்படுத்திய பிக்கப் ரக வாகனம் ஒன்றையும் மீட்டு குற்ற விசாரணைப் பிரிவினர் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதில் கைது செய்யப்பட்டவர்கள் காத்தான்குடி பிரதேசத்தைச் சேர்ந்த 35, 37 வயதுடையவர்கள் எனவும் இவர்கள் அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக மாடுகளை கடத்திச் சென்ற மற்றும் போலி ஆவணங்கள் தயாரித்தமை, மாடுகளை சிறிய பகுதியில் அடைத்து சித்திரவதை செய்தமை போன்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்துள்ளதாகவும் இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# போடியார் புலம்பல்!



**மகிந்தவும், ரணிலும் முக்கிய பேச்சாம் எண்டு ஒரு செய்தியைப்பார்தன்.. அவங்க முக்கி பேசித்தானே போனவருஷம் ரணிலுக்கு பிரதமர், ஜனாதிபதி எல்லாம் கிடைச்சது எலுவா..? இப்ப முக்கிப்பேசி என்னத்த புடுங்கப்போறாங்க.. பிரதமர் பதவிய தினசிட்ட இருந்து புடுங்கி மகிந்தட்ட கொடுக்கப்போகுதோ அந்த நரி ஆருக்கோ குழி வெட்டுற பேச்சாகத்தான் இருக்கும் எண்டது மட்டும் மெய்தான்!**

# நோன்புப்பெருநாளை முன்னிட்டு மீராகேணியில் வாராந்த சந்தை



(ஏறாவூர் செய்தியாளர்)

புனித நோன்புப்பெருநாளை முன்னிட்டு மட்டக்களப்பு - ஏறாவூர்ப்பற்று மீராகேணி பிரதேச விசேட வாராந்த சந்தை வியாழக்கிழமை (20) கூடியது. ஆயிரக்கணக்கான பொது மக்கள் இங்கு முண்டியடித்துக்கொண்டு பொருட்கொள்வனவில் ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது.

உள்ளூர் மற்றும் தென்பகுதியைச் சேர்ந்த சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் வியாபாரிகள் இங்கு வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். வீட்டுப்பாவனைக்கான அனைத்துப்பொருட்கள், மரக்கறி வகைகள், பழங்கள் மற்றும் ஆடைவகைகளும் இதன்போது விற்பனை செய்யப்பட்டன.

எனினும், இச்சந்தையில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுவதனால் பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக நுகர்வோர் தெரிவித்தனர்.

இச்சந்தை கடந்த 2006ஆம் ஆண்டு முன்னாள் அமைச்சர் பஷீர் சேகுதாவூதினால் நாளாந்த சந்தையாக திறக்கப்பட்டது. இங்கு போதியளவு வசதிவாய்ப்புகள் ஏற்படுத்தப்படாததன் காரணமாக சில மாதங்களிலேயே சந்தை மூடப்பட்டது.

பின்னர், ஏறாவூர்ப்பற்று பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.பி.ஜெயினுலாப்தீன் மேற்கொண்ட தொடர் முயற்சியினையடுத்து கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் வாராந்த சந்தையாகத் திறக்கப்பட்டு வியாழக்கிழமை தோறும் இயங்கி வருகின்றது.

ஆனபோதிலும் இச்சந்தையில் குடிநீர், மலசலகூடம் மற்றும் மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகள் இதுவரை செய்யப்படாதுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மேலும் இங்குள்ள குப்பைகள்கூட உரிய நேரத்தில் அகற்றப்படாத நிலைமையே காணப்படுகின்றது.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இச்சந்தையின் நிலைமை குறித்து கவனம் செலுத்த வேண்டுமென கோரிக்கை விடுக்கின்றனர்.

# கல்முனை கடற்கரையில் பெருநாள் தொழுகை

(மாவடிப்பள்ளி செய்தியாளர்)

கல்முனை முஹம்மதிய்யா ஜும்ஆப் பள்ளிவாசல் ஏற்பாடு செய்துள்ள நோன்புப் பெருநாள் தொழுகை வழமைபோன்று இம்முறையும் கல்முனை கடற்கரை வீதியிலுள்ள ஹுதா திறந்த வெளியில் நடைபெறவுள்ளது.

காலை 6.45மணிக்கு நடைபெறவுள்ள நோன்புப்பெருநாள் தொழுகையிலும் பெருநாள் குத்பாவிலும் கலந்து கொள்ளவுள்ளோர் உரிய நேரத்துக்கு முன்னர் இத்திடலுக்கு சமுகமளிக்குமாறும் வீட்டிலிருந்தே வுழுச்செய்து கொண்டு வருமாறும் முஸல்லாக்களையும் கொண்டு வருமாறும் இதன் ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஆண்கள் மற்றும் பெண்களுக்கு ஒரே தடவையில் தொழுகை நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது

(பெரியநீலாவணை செய்தியாளர், பாறுக் ஷிஹான்)


பெரியநீலாவணை தொடர் மாடி வீட்டுத் திட்ட பகுதியில் கேரள கஞ்சா வைத்திருந்த 35 வயதுடைய இளைஞர் ஒருவர் பெரியநீலாவணை பொலிஸாரால் புதன்கிழமை (19) கைது செய்யப்பட்டுள்ளார்.

பெரியநீலாவணை பொலிஸாருக்கு கிடைக்கப்பட்ட இரகசியத் தகவலையடுத்து, நிலைய பொறுப்பதிகாரி ஆர்.டி.துஷார திலங்க ஜெயலால் வழிகாட்டலுக்கமைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் டி. தினேஷ் தலைமையிலான பொலிஸ் குழுவினர் சந்தேக நபரை கைது செய்த போது அவரிடமிருந்து 860 கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டதுடன், கைது செய்யப்பட்ட 35 வயதுடைய இளைஞர் கல்முனை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை பெரியநீலாவணை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யேமனில் கூட்ட நெரிசலில் சிக்கி 85 பேர் உயிரிழப்பு; 322 பேர் காயம்

## ரமழான் நலத்திட்ட உதவிகளை வாங்கச் சென்றவர்களுக்கு ஏற்பட்ட கதி







யேமனில் கூட்ட நெரிசலில் சிக்கி 85இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன், 322இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

வளைகுடா நாடான யேமனில் ரமழான் மாதத்தை முன்னிட்டு அந்நாட்டு தலைநகர் சனாவில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இதனுடன் பணம், உணவு மற்றும் அன்னதானம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அப்போது உதவிப்பொருட்களைப் பெற ஒரேநேரத்தில் ஏராளமானோர் கூடினர். மக்கள் ஒருவொருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு உதவிகளைப் பெற முயல கூட்ட நெரிசல் ஏற்பட்டது. இந்தக் கூட்ட நெரிசலில் சிக்கி 85இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன், 322இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.


உயிரிழந்தோரில் பெண்களும், குழந்தைகளுமே அதிகம். இதனை அந்நாட்டு சுகாதார அதிகாரிகளும் உறுதிசெய்துள்ளனர். காயமடைந்தவர்கள் அருகிலுள்ள வைத்தியசாலைளுக்கு சிகிச்சைக்காக அனுப்பப்பட்டுள்ளனர்.

இது குறித்து யேமன் போராட்டக்குழுவான ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் குழு தங்களின் தொலைக்காட்சியில், அரசின் அலட்சியத்தால் அப்பாவி உயிர்கள் பறிபோனதாக செய்தி வெளியிட்டது.

அந்தச் செய்தியில் ஆங்காங்கே சடலங்கள் வரிசையாக குவித்துவைக்கப்பட்டுள்ளமை காட்டப்பட்டது மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

மேலும் காயமடைந்தோரில் பெரும்பாலானோரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# சீன 'ஸ்ரிக்கருடன்' இலங்கைப் புறா இராமேஸ்வரத்தில் தஞ்சம்



இலங்கை புறாவொன்று நடுக்கடலில் மீன் பிடித்த இராமேஸ்வரம் மீனவர் படகில் தஞ்சமடைந்துள்ளது. குறித்த புறாவின் காலில் கட்டப்பட்ட வளையத்தில் சீன எழுத்துகள் இருந்ததால், சீனா உளவு பார்க்க அனுப்பியதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த அரசபாண்டி என்பவர் கடந்த 15ஆம் திகதி நாட்டுப்படகில் பாம்பனிலிருந்து 13 கிலோமீற்றரில் பாக்குநீரிணை கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்தபோது வானில் வட்டமடித்த புறாவொன்று திடீரென படகில் தஞ்சமடைந்தது.

புறாவை மீட்ட மீனவர்கள், இராமேஸ்வரத்தில் 30இற்கும் மேற்பட்ட புறாக்களை வளர்க்கும் மீனவர் ரகுவிடம் கொடுத்தனர். இந்தப் புறாவின் காலிலுள்ள வளையத்தில் இலங்கை யாழ்ப்பாணம் சுதன் மற்றும் மொபைல் போன் எண் 0779432037 என எழுதப்பட்டிருந்துள்ளது.

மற்றொரு காலில் சீன எழுத்துகள் பொறித்த ஸ்ரிக்கர், அதன் கீழே எம்.எவ். 3209 என எழுதப்பட்டிருந்தது. இந்தப் புறா, ஹோமர் இனத்தைச் சேர்ந்த பந்தய புறா; தொடர்ந்து 300 கிலோமீற்றர் தூரம் பறக்கக்கூடியதென ரகு தெரிவித்தார்.

புறாவின் காலில் சீன எழுத்து ஸ்ரிக்கர் இருந்ததால், பாக்குநீரிணை கடலில் இந்தியக் கடற்படை ரோந்து கப்பல் நடமாட்டம், கடல் பாதுகாப்பு குறித்து உளவு பார்க்க சீனா சிறிய ரக கெமராவை புறாவின் காலில் கட்டி உளவு பார்த்திருக்கக்கூடும் என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

## சூடானில் 24 மணிநேர போர் நிறுத்த ஒப்பந்தம்:

# கார்டோமிலிருந்து வெளியேறும் சூடானியர்கள்; உணவு - தண்ணீரின்றி இந்தியர்கள் சிக்கித்தவிப்பு

உலக செய்திகள்

சூடானில் 24 மணிநேர போர் நிறுத்தம் இருந்தபோதிலும் கார்டோம் (Khartoum) நகரை விட்டு வெளியேற முடியாமல் இந்தியர்கள் தவிப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

தாக்குதல் நடக்கும் இடத்திலிருந்து சூடானியர்கள் வெளியேறிச் செல்கின்ற நிலையில், இந்தியர்கள் உள்ளிட்டோர் எங்கு செல்வது எனத் தெரியாமல் தவித்து வருகின்றனர். உணவு, தண்ணீர் இல்லை; தங்கியிருக்கும் இடத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் கார்டோம் நகரில் சிக்கியுள்ள இந்தியர்கள் தகவல் தெரிவித்துள்ளனர்.

சூடானில் அதிகாரத்தைக் கைப்பற்றுவது தொடர்பாக இராணுவம் மற்றும் துணை இராணுவத்துக்கிடையே மோதல் ஏற்பட்டுள்ளது. 6ஆவது நாளாக நேற்றும் இரு தரப்பினரிடையே மோதல் நீடித்தது. தலைநகர் கார்டோம் மற்றும் ஓம்டர்மேன் நகரங்களில் துப்பாக்கிச் சூடு, பீரங்கித் தாக்குதல்கள் மற்றும் வான்வழித் தாக்குதல் நடத்தப்பட்டன. இராணுவத் தலைமையகம் மற்றும் சர்வதேச விமான நிலையம் அருகிலும் இரு தரப்பினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.



செவ்வாய்க்கிழமைமுதல் புதன்கிழமை சூரிய அஸ்தமனம் வரை 24 மணிநேர போர் நிறுத்தம் அமுலில் இருக்கவேண்டும் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் எண்டனி பிளிங்கன் இரு தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்த நிலையில், போர் நிறுத்தத்தைக் கடைப்பிடிப்பதாக அவர்கள் உறுதியளித்தனர். எனினும், அவர்கள் அவற்றை கடைப்பிடிக்கத் தவறியுள்ளனர். தொடர்ந்து தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர். ஒரு வாரமாக வீடுகளில் முடங்கி இருந்த சூடான் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறத் தொடங்கியுள்ளனர். பெண்கள், சிறுவர்கள் என அனைவரும் தங்களது உடமைகளுடன் நடந்தும் வாகனங்களிலும் நகரங்களை விட்டு வெளியேறத் தொடங்கியுள்ளனர்.

இதனிடையே இராணுவ மோதலில் 296இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதுடன், 3,000இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர் என ஐ.நா. தெரிவித்துள்ளது.

சூடானில் தற்போது நிலைமை மிகவும் பதற்றமாகக் காணப்படுவதால் அங்கு இந்தியர்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதில் இந்தியா கவனம் செலுத்தி வருகின்றது. இதற்காக அமெரிக்கா, பிரித்தானிய, சவூதி அரேபியா உள்ளிட்ட மற்ற நாடுகளுடன் இந்தியா நெருக்கமாக ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகின்றது. இந்நிலையில், சூடானில் 24 மணிநேர போர் நிறுத்தம் இருந்தபோதிலும் கர்தூம் நகரை விட்டு வெளியேற முடியாமல் இந்தியர்கள் தவித்து வருகின்றனர். தாக்குதல் நடந்த இடத்திலிருந்து சூடானியர்கள் வெளியேறிச் செல்லும் நிலையில் இந்தியர்கள் தவிக்கின்றனர்.

# பூமியை 62 விநாடிகள் மறைத்து வைத்த சூரியன்



400 ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழக்கூடிய 'நிங்கலோ' சூரிய கிரகணம் நேற்று நிகழ்ந்தது.

இலங்கை, இந்தியா உள்ளிட்ட நாடுகளில் சூரிய கிரகணம் தென்படாதபோதிலும் அவுஸ்திரேலியாவின் மேற்கு பகுதி, கிழக்கு தைமூர், பிலிபைன்ஸ் போன்ற பகுதிகளில் தென்பட்டுள்ளது. இந்நிகழ்வால் அங்கு 62 விநாடிகள் சூரியன் பூமியை மறைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



சீனத் தலைநகர் பீஜிங்கிலுள்ள சாங்ஃபெங் வைத்தியசாலையில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் 21 பேர் உயிரிழந்துள்ளதுடன், 71 பேர் மீட்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், வைத்திய சாலை கட்டடத்தில் தீ பரவத் தொடங்கியதையடுத்து பலர் உயிரைப் பாதுகாத்துக்கொள்ளும் நோக்கில் ஜன்னல் வழியாக வெளியேறியுள்ளனர்.

# மட்டு. இந்துவின் 77ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கிரிக்கெட் போட்டி

**(கல்லடி செய்தியாளர்)**



மட்டக்களப்பு இந்துக் கல்லூரியின் 77ஆவது ஆண்டு நிறைவை சிறப்பிக்கும் வகையில் கிரிக்கெட் சுற்றுப்போட்டியொன்று கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இக்கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அணிக்கு 9 பேர் கொண்ட 5 ஓவர்கள் அடங்கிய 11 அணிகளுக்கிடையில் போட்டி நடைபெற்றது. கல்லூரி பழைய மாணவர் சங்க பொதுச் செயலாளர் எம். சசிகுமார் தலைமையில் நடைபெற்ற இக்கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் கல்லூரி அதிபர் சண்டேஸ்வரர் சர்மா, மட்டக்களப்பு கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.லவக்குமார், பழைய மாணவர் சங்க ஆலோசகர் வைரமுத்து பஞ்சலிங்கம், கல்லூரி அபிவிருத்திச் சங்கச் செயலாளர் பிரபாகரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# அக்கரைப்பற்று இந்து இளைஞர் மன்றத்தின் பிரிமியர் லீக் 2023 கிரிக்கெட் சுற்றுத்தொடர்



அக்கரைப்பற்று இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் முதல் தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பிரிமியர் லீக் 2023 கிரிக்கெட் சுற்றுத்தொடரின் ஆரம்ப நிகழ்வும் கழக சீருடை வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

எதிர்வரும் 29ஆம் திகதி இடம்பெறவுள்ள விபுலானந்தா அபிவிருத்தி நிலையத்தின் முத்து விழாவை சிறப்பிக்கும் முகமாகவும் இளைஞர்களை இந்து இளைஞர் மன்றத்தினுள் உள்வாங்கி அதன்மூலம் அவர்களை சமூகப்பணிக்குள் அழைத்துச் செல்லும் வேலைத்திட்டத்தின்கீழும் இச்சுற்றுப்போட்டி நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விபுலானந்தா சிறுவர் இல்லத்தின் ஸ்தாபகரும் இந்து இளைஞர் மன்றத்தின் தலைவருமான இறைபணிச்செம்மல் த.கயிலாயபிள்ளையின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுகளில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.கோடீஸ்வரன், ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன், அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி விஜயதுங்க, வைத்தியர் சித்திரா தேவராஜன், தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் அனுசியா சேனாதிராஜா, வர்த்தகர் சங்கத் தலைவர் ஆர்.ஜெகநாதன், முன்னாள் பிரதேச சபை தவிசாளர் த.கிரோஜாதரன், அனுசரணையாளர்களான ததீஸ்வரன் உள்ளிட்ட இந்து இளைஞர் மன்ற உறுப்பினர்கள் ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் வீரர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து போட்டிகளில் கலந்து கொள்கின்ற ஏழு அணிகளின் பெயர்கள் மற்றும் வீரர்கள், நடுவர்கள், வர்ணனையாளர்கள், புள்ளி கணிப்பீட்டாளர்கள் மேற்பார்வையாளர்கள் அனுசரணையாளர்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டதுடன், அவர்களுக்கான சீருடைகளும் அதிதிகளினால் வழங்கப்பட்டன. இதன் பின்னராக இந்து இளைஞர் மன்றத்தின் தலைவர் உள்ளிட்ட அதிதிகளினால் போட்டித்தொடர் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

# பந்தய விளம்பரங்களின் கட்டுப்பாடு கைவிடப்படுகிறது




**(ரமணி)**

பந்தய நிறுவனங்களின் சின்னங்களை சீருடையில் அணிந்து விளையாட டெஸ்ட், ஒரு நாள் தொடர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்படவுள்ளது. இந்தத் தளர்வு இரு நாடுகளுக்கிடையே விளையாடப்படும் தொடர்களுக்குப் பொருந்தும். ஆனால், ஒக்டோபரில் தொடங்கும் ஆண்கள் உலகக் கிண்ணம் போன்ற அதிகாரப்பூர்வ சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ICC) போட்டிகளுக்கு இந்தக் கட்டுப்பாடு தொடர்ந்து இருக்கும். ஆண்கள் மற்றும் பெண்கள் ஆஷஸில் விளையாடும் இங்கிலாந்து அணிகள் இன்னும் அத்தகைய சின்னங்களை அணிய முடியாது என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கிலீஷ் பிரீமியர் லீக்கில் பந்தய நிறுவனங்களைக்கொண்ட சட்டை விளம்பரம் அனுமதிக்கப்படுகிறது. இதற்கிடையில் இங்கிலாந்து டெஸ்ட் பயிற்சியாளர் பிரெண்டன் மெக்கல்லம், சைப்ரஸில் பதிவுசெய்யப்பட்ட ஒன்லைன் புக்மேக்கிங் நிறுவனமான 22பெட் உடன் ஜனவரி மாதம் தூதராக ஈடுபட்டு ஒன்லைன் விளம்பரங்களில் தோன்றியதற்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்போவதில்லை என்று ECB கூறியுள்ளது.

கிரிக்கெட்டில் பந்தயம் கட்டுவது 18ஆம் நூற்றாண்டிலிருந்து நடந்தாலும், 1990களின் பிற்பகுதியில் இணையம் மற்றும் மொபைல் பந்தயம் மிகவும் பரவலாகிவிட்டதால் 'ஸ்பாட் பிக்சிங்' பிரச்சினை முதன்முதலில் வெளிப்படையாகத் தோன்றியதிலிருந்து கிரிக்கெட்டில் இது மிகவும் சர்ச்சைக்குரிய விடயமாக மாறியுள்ளது.

2000ஆம் ஆண்டில், தென்னாபிரிக்க கேப்டன் ஹன்சி குரோன்ஜே பிக்சிங் செய்ததாகக் கண்டறியப்பட்டு வாழ்நாள் முழுவதும் விளையாடவோ அல்லது பயிற்சியளிக்கவோ தடை விதிக்கப்பட்டார்.


CC 2000ஆம் ஆண்டில் அதன் ஊழல் எதிர்ப்புப் பிரிவை (ACU) நிறுவியது மற்றும் அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் டிரஸ்ஸிங் ரூம் பகுதிகளைச் சுற்றி கட்டுப்பாடுகள் அடங்கும். அங்கு வீரர்கள் மொபைல் போன்கள் மற்றும் பிற மின்னணு சாதனங்களை பாவிக்க தடை விதிக்கப்பட்டது.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com




# சிராஜை அணுகிய சூதாட்டக்காரரிடம் விசாரணை




இந்திய கிரிக்கெட் வீரர் மொஹமட் சிராஜை சூதாட்டத்துக்குத் தகவல் பெற ஹைதராபாத்தைச் சேர்ந்த டிரைவர் ஒருவர் அணுகிய விவரம் கசிந்துள்ளது. இந்தியா-அவுஸ்திரேலியா இடையே 3 போட்டிகள்கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடர் இந்தியாவில் கடந்த மாதம் நடந்தது.

இதில் மொத்தம் 5 விக்கெட்டுகளை வீழ்த்திய முகமது சிராஜை தொடரின்போது மர்ம நபர் ஒருவர் தொடர்புகொண்டார். அவர், நான் ஒரு டிரைவர். கிரிக்கெட்டில் நண்பர்களிடம் பந்தயம் கட்டி நிறைய பணத்தை இழந்துள்ளேன். இழந்த பணத்தை மீட்பதற்கு நீங்கள் அணி குறித்த தகவல்களை தர வேண்டும் என்று கேட்டுள்ளார்.

சந்தேகத்துக்குரிய நபர் யாராவது தொடர்பு கொண்டால் இந்திய கிரிக்கெட் சபையின் ஊழல் தடுப்புப் பிரிவுக்கு உடனடியாக தெரியப்படுத்த வேண்டும். சாதாரணமாக விட்டுவிட்டால் தகவல் தெரிவிக்காத குற்றத்துக்காக அந்த வீரருக்கு ஓராண்டு தடை விதிக்கப்படும். இதனால் சிராஜ் ஊழல் தடுப்புப் பிரிவு அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு சென்றார்.

இது குறித்து கிரிக்கெட் சபை நிர்வாகி கூறுகையில், சிராஜை அணுகியவர் சூதாட்ட தரகர் கிடையாது. கிரிக்கெட் முடிவு குறித்து பந்தயம் கட்டி பணத்தை இழந்தவராவார். அவரை சட்ட அமுலாக்கப் பிரிவு அதிகாரிகள் பிடித்து விசாரித்து வருகின்றனர். மேலும் விபரங்களுக்காக காத்திருக்கிறோம் - என்றார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7